வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 20.06.2022 திங்கட்கிழமை இதழ் : 196 பக்கங்கள் : 16



# விரைவில் தேர்தல் ஜனாதிபதி உறுதி!

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் அரசியல் ரீதியிலான பிரச்னைகளுக்கு தீர்வு காண வெகுவிரைவில் மக்ககளுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக் கப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை சந்தித்த கட்சியினருக்கு உறுதியளித்துள்ளார். இதன் மூலம் விரைவில் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்படும் சாத் தியம் உள்ளது என்று அரசியல் அவதானிகள் தெரி விக்கின்றனர்.

15

# எங்கள் சந்ததியைப் பாதுகாப்போம் அதிபர்களுக்கு ஆசிரியர்கள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

நாட்டில் உள்ள நெருக் கடியான சூழல் ஒருபோ தும் மாறப்போவதில்லை. எமது சந்ததியைப் பாது காப்பது எங்களின் தலை யாய கடமை. இதற்காக அனைவரும் புரிந்துணர் வோடு இணைவோம் - இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனைத்து பாடசாலைக ளின் அதிபர்களிடமும் உருக்கமான வேண்டு கோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்த அறிக் கையில்,

“பெருமைக்குரிய அதி பர்களே, நாடு நெருக்கடி யான சூழ்நிலைக்குள் அகப்பட்டுவிட்டது. இதனை மீட்க அரசாங் கம் மேற்கொண்ட அனைத்து முயற்சி களும் தோற்றுவிட்டன. நாளுக்குநாள் வரிசைகள் பெருகுகின்றனவே தவிர, எந்த முன்னேற்றமும் இல்லை.

இந்த அபாயகரமான சூழ்நிலையில் இலங்கை யில் உள்ள குழந்தை களின் வாழ்வு எமது கைகளில் ஒப்படைக்கப்

15

## மின்வெட்டு நேரம் அதிகரிக்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 20

இன்றும் நாளையும் சுழற்சி முறையில் மின் வெட்டு அமுல்படுத் தப்படவுள்ளது. முன்னர், ஒரு மணி நேரம் என்று அறிவிக்கப்பட்ட மின் வெட்டு, தற்போது இரண்டரை மணி நேர மாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

இதற்கமைய, இன்றும் நாளை

15

## அத்தியாவசிய சேவையினருக்கு வெள்ளிக்கிழமையில் எரிபொருள்!

கொழும்பு, ஜூன் 30

அத்தியாவசிய சுகா தார சேவையினருக்கு தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிலையங்கள் ஊடாக வெள்ளிக்கிழமை களில் எரிபொருளை வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது.

எரிபொருள் நெருக் கடி காரணமாக அத்தியா வசிய பணியாளர் கள் பணிக்கு சமுக மளிக்க முடியாத

15

## பெற்றோலுக்காக 3 நாட்கள் வரிசையில் நிற்காதீர்கள்!

எரிபொருள் அமைச்சர் கேட்கிறார்

கொழும்பு, ஜூன் 20

அடுத்த பெற்றோல் கப்பல் எதிர்வரும் ஜூன் 23ஆம் திகதி நாட்டை வந்தடையும் எனவே, அடுத்த 3 நாட்களுக்கு பெற்றோலுக்காக வரிசை யில் நிற்க வேண்டாம் என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர பொதுமக்களிடம் கோரி யுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித் தார்.

முச்சக்கர வண்டி சாரதிகள்

15

## யாழ். - சென்னை விமான கட்டணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சென்னை, திருச்சிக்கான விமானக் கட்டணம் வெளியாகியுள்ளது.

இதன்படி, யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சிக்கு ஒரு வழிக் கட்டணமாக 40 ஆயிரம் ரூபாயும், யாழ்ப்பாணத் திலிருந்து சென்னைக்கு ஒரு வழிக்கட்டணமாக 50ஆயிரம் ரூபாயும் அறவிடப்படவுள்ளது.

இதேசமயம், பயணி ஒருவர் தம்வசம், 25

15

## யாழ். வலயப் பாடசாலைகள் இன்று வழமைபோல் இயங்கும்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகள் அனைத் தும் இன்று முதல் தளர்வில்லாமல் வழமைபோன்று இயங்கும் என்று பாடசாலை அதிபர்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இது குறித்து விடுத்த செய்திக்குறிப்பில், யாழ்ப்பாண வலய நகர்புற பாடசாலை களின் அதிபர்களுடன் கலந்துரையாடிய பின்

15

## கீரிமலையில் சடலம் கொலை என சந்தேகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

கீரிமலை புதிய கொலனி பகுதியில் சந் தேகத்துக்கு இடமான முறையில் ஆண் ஒருவர் நேற்று முன்தினம் உயிரி ழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சங்கிலியன் நடராசா என்ற 63 வயதான நபரே உயிரிழந்த வராவார்.

15

# தந்தைக்கு பின், தாயின் இறுதி சடங்குக்கு யாழ். அழைத்துவரப்பட்ட அரசியல் கைதி!

யாழ்ப்பாணம், ஜூன் 20

தந்தைக்கு பின்னர், தாயாரின் இறுதிச் சடங்குக்காக யாழ்ப்பா ணம் அழைத்து வரப்பட்டுள் ளார் அரசியல் கைதியான விக் னேஸ்வரநாதன் பார்த்தீபன்.

26 ஆண்டுகளாக சிறையில் வாடும் பார்த்தீபன் நேற்று அவ ரின் இல்லத்துக்கு கடும் பாது காப்புடன் அழைத்து வரப்பட் டார். அவரின் தந்தையின் இறுதிசடங்குக்காக 2017ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டவர், தற் போது தாயாரின் இறுதிச் சடங்குக்காக அழைத்து வரப்பட்டிருப்பது

15



## சகல பரீட்சைகளையும் ஒத்திவைக்க தீர்மானம்!

கல்வி அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப் பாட்டால் இந்த வாரம் கல்வி செயல்பாடுகள் மட் டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை, புலமைப்பரிசில் மற்றும் சாதாரண தர பரீட்சைகளை ஒத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

15

## இப்படியும் நடக்கிறது...!

கிளிநொச்சியில் இரவு வேளையில் வாய்க்கால் ஓரமாக இரு நண்பர்கள் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

வாய்க்காலில் தண்ணீர் நிரம்பியிருந்தது. ஆட்டுக்குட்டியொன்று அந்த வாய்க்காலில் விழுந்து கிடந்தது. தண்ணீர் வேகமாக ஓடிக்கொண்டிருக்க, அந்த ஆட்டுக்குட்டி தண்ணீரின் வேகத்துக்கு அடித்துச் செல்லப்படுவதை தடுக்க, அது எதிர்ப்பக்கமாக நகர முயன்று கொண்டிருந்தது.

அதனைப் பார்த்த நண்பர்களில் ஒருவர், வாய்க்காலில் பாய்ந்து ஆட்டுக்குட்டியை தூக்க முயன்றார். தூக்கிக்கொண்டு போனால் நாளை ஆட்டுக்கறி சாப்பிடலாம் என்று நினைத்திருப்பாரோ தெரியவில்லை. நீண்டநேரமாக ஆட்டுக்குட்டியுடன் மல்லுக்கட்டிக்கொண்டிருந்த அவரைப் பார்த்து, வெளியே நின்ற மற்றைய நண்பர், "ஏலாவிட்டால் விட்டுட்டு வாப்பா" என்றார்.

அதற்கு அவரோ, "நான் பிடிச்சிருந்தால் தானேடாப்பா விட்டுட்டு வாறதுக்கு. அது எல்லோ என்னைப் பிடிச்சிருக்குது. அது ஆட்டுக்குட்டியில்லையடா, காட்டுப் பன்றி " என்றாராம்.

இருபதாவது அரசமைப்பு திருத்தத்திற்கு பிறகு பிரதமர் பதவியென்பது வெறும் "றப்பர் ஸ்ராம்" பதவிதான். பிரேமதாச, தான் ஜனாதிபதியாக இருந்தபோது டிங்கிரி பண்டா விஜேதுங்கவை பிரதமராக்கியது பற்றி முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

பிரேமதாசவுக்கு டிங்கிரி பண்டா விஜேதுங்க, சந்திரிகாவுக்கு ரத்தினசிறி விக்கிரமரட்ன, மஹிந்தவுக்கு டி. எம். ஜெயரத்ன என்று பிரதமர்கள் இருந்தது எப்படி என்பது தெரிந்ததுதான்.

ஜனாதிபதி இடுகின்ற கட்டளைகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது தான் பிரதமர்களின் பணியாக இருந்திருக்கின்றது.

பத்தொன்பதாவது திருத்தத்தைக் கொண்டுவந்து, ரணில் பிரதமர்களுக்கு ஒரு "கெத்தை" உருவாக்கினார். ஆனால், அதுவே இவருக்கும் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே உரசலை ஏற்படுத்தியது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இனி இருபத்தியொன்றைக் கொண்டுவந்தாலும் மைத்திரி - ரணில் பதவிக்கால சம்பவங்கள் மீண்டும் ஏற்படலாம். இருபத்தியொன்று வருமா என்பது வேறு சங்கதி.

இலங்கை எழுபத்தியேழில் சிறிமாவோ காலத்தில் குடியரசாக மாறிய பின்னர் இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக இருந்தவர் வில்லியம் கோபல்லாவ. அதற்கு முன்னதாக பிரிட்டன் மகாராணியே இலங்கைக்கு ஆட்சித் தலைவர். அப்போது மகாராணியால் நியமிக்கப்பட்ட கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் கோபல்லாவ, இலங்கை குடியரசாகியதும் இலங்கைக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

பின்னர் பதவிக்கு வந்த ஜே. ஆர். ஜெயவர்த்தன, அரசமைப்பை மாற்றி, சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, வில்லியம் கோபல்லாவ பதவியை இழந்தார். நிறைவேற்று ஜனாதிபதி முறை அமுலுக்கு வந்த பின்னர் பிரதமர் எவ்வாறு "றப்பர் ஸ்ராம்"பாக ஆகினாரோ அதே போலத்தான், நிறைவேற்று ஜனாதிபதி முறை அமுலுக்கு வரும் முதல், ஜனாதிபதி ஒரு "றப்பர் ஸ்ராம்"பாக மட்டுமே பணியாற்றினார்.

இப்போது, நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து வெளியேறுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை அவர் நிராகரித்து விட்டபோதிலும், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்பதையும் அறிவித்து விட்டார்.

கோட்டாவை வீட்டுக்குப்போ என்று சொல்வதை விட, அடுத்த தடவை தேர்தலில் போட்டியிட விரும்பாத ஒருவரைக் கொண்டு இந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்கு முயற்சி செய்வதே இன்றுள்ள சரியான வழியாக இருக்கும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வது எனில் அதற்காக நிச்சயம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்ல வேண்டியிருக்கும் என்பது தெரிந்தது தான்.

அவ்வாறெனில், கோட்டாபயவின் பதவிக்காலம் முடிவதற்கு முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு செல்வதற்கான வழிப்பாதை ஒன்றை தயாரிக்குமாறு அவரிடமே கோரிக்கை விடுப்பதை விடுத்து, மீண்டும் மீண்டும் திருத்தங்கள் மூலம் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை குறைப்பது குறித்து பேசுவது, காலத்தை கடத்திக்கொண்டிருக்க மட்டுமே உதவும்.

தற்போது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இருபத்தியோராவது திருத்தம், இன்று அமைச்சரவையில் மீண்டும் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும் என்று கடந்த வாரம் அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், கடந்த அமைச்சரவையில் எதற்காக ஒரு வாரம் அந்த விவகாரம் பின்போடப்பட்டதோ அதுகுறித்து எங்கும் கடந்த ஏழுநாட்களிலும் ஆராயப்பட்டதாக தெரியவில்லை. அனேகமாக, இன்றும் அந்த விவகாரம் பின்தள்ளப்படலாம். எந்த ஒரு விடயமும் பின் தள்ளப்படுகின்றது என்றால், அது சாத்தியமாவதும் கடினமானது என்பது புரியாததல்ல.

ரணில் பிரதமர் பதவியை பொறுப்பேற்றபோது, ஜனாதிபதியும் இந்த இருபத்தியோராவது திருத்தத்தை நிறைவேற்ற சம்மதம் தெரிவித்திருந்ததாக கூறப்பட்டது. ஆனால், அப்போது இருபத்தியோராவது திருத்தம் என்பது பத்தொன்பதை மீண்டும் கொண்டு வருவதாகவே இருக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அமைச்சரவைக்கு சமர்ப்பித்த திருத்த யோசனை, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கின்ற- அதாவது, பத்தொன்பதில் குறைக்கப்பட்டதுபோன்று குறைக்கப்படவில்லை என்று பலரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

இதன்மூலம், எஞ்சியிருக்கும் காலத்தில் அதிகாரங்கள் இல்லாத ஜனாதிபதியாக தான் இருக்க விரும்பவில்லை என்பதையே ஜனாதிபதி உணர்த்தியிருக்கின்றார்.

அறுபத்தி ஐந்து லட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்று தெரிவான எனக்கு இருக்கும் அதிகாரங்களை மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரிடம் வழங்கவேண்டுமா என்று அவர் சிந்தித்திருப்பாரோ தெரியவில்லை.

இருபத்தியோராவது திருத்தத்தை நிறைவேற்றுவேன் என்று ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை நம்பியே பிரதமர் பதவியை பொறுப்பெடுத்த ரணில் விக்கிரமசிங்க, இன்று அதனை நிறைவேற்ற முடியாத அளவிற்கு இழுபறி ஏற்பட்டுள்ள போதிலும், பதவியை விட்டு விலகமுடியாமல் இருப்பதாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இருபத்தியொன்றை நிறைவேற்றினால், ரணிலுடன் கைகோர்க்க தயாராக இருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் மற்றுமொரு தொகுதி எம.பி.க்களும் இலவுகாத்த கிளிபோல காத்துக்கொண்டிருக்கின்றனராம்!

- ஊர்க்குருவி

# ஏழைகளை குறிவைத்து ஏமாற்று நடவடிக்கைகள்!

## விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை

வடமராட்சி, ஜூன் 20

யாழ்ப்பாணத்தில் ஏழைகளுக்கு பண உதவி செய்வதாகத் தெரிவித்து ஏமாற்று நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இது குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கரவெட்டி மேற்கு, ஜே/363 கிராம சேவகர் எச்சரித்துள்ளார்.

அந்த கிராமசேவகர் பிரிவின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இந்த விழிப்புணர்வை அவர் பதிவிட்டுள்ளார்.

077 060 0886 என்ற கைபேசி இலக்கத்திலிருந்து குறித்த கிராம சேவகரை தொடர்பு கொண்டவர், தன்னை ஒரு மகப்பேற்று மருத்துவர் ஒருவரின் பெயரால் அறிமுகம் செய்து, தனது தாயார் நினைவாக கணவனால் கைவிடப்பட்ட இரு குடும்பங்களுக்கு உதவி செய்யவுள்ளதாகவும் அவ்வாறு உதவி தேவையானோரின் விவரம் தருமாறு கேட்டுள்ளார்.

ஆனால், குறித்த மருத்துவரை கிராம சேவகருக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்பதால், அவரின் தொலைபேசி இலக்கம் தன்னிடம் இருந்தாலும் அது குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்நிலையில், தொடர்பு கொண்ட நபர், இது தனது மற்றொரு தொடர்பு இலக்கம் என்று கூறி தடுமாறியுள்ளார். இதையடுத்து, உஷாரடைந்த கிராம சேவகர் தனக்கு தெரிந்த ஒருவரின் விவரத்தை வழங்கி விட்டு, உடனடியாகவே அவரிடம் விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கிராம சேவகர், வழங்கிய தொடர்பு இலக்கத்துக்கு உரியவரை தொடர்பு கொண்ட நபர், "கிராம சேவகர் உங்கள் விவரத்தை தந்தார். உங்களுக்கு உதவவுள்ளேன். ஏ. ரி. எம். அட்டை உள்ள வங்கி கணக்கு இலக்கம் ஒன்றை தாருங்கள் என்று கூறியுள்ளார்.

இதற்கு, தம்மிடம் வங்கிக் கணக்கு இல்லை என்று கூறவே, உறவினர் யாரினுடைய வங்கி கணக்கு இலக்கத்தையேனும் தருமாறு கூறியுள்ளார்.

தொடர்ந்து வற்புறுத்தியதால், செயல்பாட்டில் இல்லாத வங்கி கணக்கு இலக்கம் ஒன்று தொடர்பு கொண்ட நபருக்கு வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து தொடர்பு கொண்ட நபர், "உங்கள் மூன்று பிள்ளைகளுக்கும் தலா 60 ஆயிரம் ரூபாய் வீதம் பணத்தை வைப்பிலிடுகிறேன். அதற்கு முன் நான் தரும் இலக்கம் ஒன்றுக்கு ஒரு பிள்ளைக்கு 4 ஆயிரத்து 500 ரூபாய் வீதம் 13 ஆயிரத்து 500 ரூபாயை வைப்பிலிடுங்கள்", என்று கூறியுள்ளார்.

இதற்கு, "நாங்கள் கூலி வேலை செய்பவர்கள் எங்களிடம் பணம் இல்லை. வேண்டுமென்றால் நீங்கள் உதவும் பணத்தில் கழித்து மீதியை தாருங்கள்", என்று கூறவே, மோசடி செய்ய தொடர்பு கொண்ட நபர், "அவ்வாறு செய்ய முடியாது", என்று கூறியுள்ளார். எனவே, இதுவிடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று அந்த கிராமசேவகர் எச்சரித்துள்ளார்.

இதனிடையே, குறித்த கைபேசி இலக்கத்திலிருந்து வேறு சிலருக்கும் இவ்வாறான அழைப்புக்கள் சென்றுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ஐ)

## வரிசையில் மரணித்தோருக்கு நட்டஈடு வழங்கக் கோரிக்கை!

கொழும்பு, ஜூன் 20

எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு வரிசைகளில் காத்திருந்தவர்களுள் இதுவரை 13 பேர் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வரிசைகளில் நின்று உயிரிழந்த குடும்பங்களுக்கு உடனடியாக நட்டஈடு வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, அவர்களுக்கான நட்டஈட்டை வழங்காவிடின், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதாக ஐக்கிய தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். (ஐ)

## எரிபொருள் தருவதாகக் கூறி மூவரிடம் ரூ. 77, 000 'அபேஸ்'!

கிளிநொச்சி, ஜூன் 20

கிளிநொச்சி மாவட்டத்தில் கள்ளச் சந்தையில் எரிபொருள் வாங்கிய மூவர் சுமார் 77 ஆயிரம் ரூபாய் பணத்தைப் பறிகொடுத்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் கனகாம்பிகை குளம், பாரதிபுரம், மலையாளபுரம் பகுதிகளில் இடம்பெற்றுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

கனகாம்பிகை குளத்தில் 12 ஆயிரம் ரூபாய் பணத்துக்கு டீசல் வாங்கிய நபருக்கு டீசலுக்கு பதிலாகத் தண்ணீர் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோல், பாரதிபுரத்தில் 35 ஆயிரம் ரூபாய்க்கு டீசல் வாங்கிய நபருக்கும் டீசலுக்குப் பதிலாக தண்ணீரே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மலையாளபுரத்தில் டீசல் தருவதாகக் கூறி 30 ஆயிரம் ரூபாயை பெற்றவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் அதிகரித்துள்ள நிலையில், பொதுமக்கள் இவ்வாறான விடயங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடமராட்சியில் டோக்கனுக்கு டீசல்

வடமராட்சி, ஜூன் 20

வடமராட்சி - மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றும் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் வாகனங்கள் காத்திருந்தன.

அதிக வாகனங்கள் காரணமாக பருத்தித்துறை பொலிஸார் டோக்கன் வழங்கி டீசல் விநியோகத்தை சீர்படுத்தினர். 150 வாகனங்களுக்கே இவ்வாறு டீசல் விநியோகிகப்பட்டது.

பேருந்து, டிப்பர் போன்ற கனரக வாகனங்களுக்கு 15 ஆயிரம் ரூபாய்க்கும், இலகுரக வாகனங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய்க்கும் டீசல் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

## பல்கலைகளை மூட எதிர்ப்பு!

கொழும்பு, ஜூன் 20

பல்கலைக்கழகங்களை மூடுவது தீர்வாகாது என்று பல்கலைக்கழக போராசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அதன் தலைவர் பேராசிரியர் ஷாம் பன்னெஹேவா இதனை தெரிவித்துள்ளார்.

கல்விக்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
20.06.2022 திங்கட்கிழமை

பிலவ வருடம், ஆனி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# முன்னேற்றங்களை காட்ட முடியாத நிலைமை?

ஓர் ஆசன - ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்ற பின்னரும்கூட, நிலைமைகளில் பெரியளவில் முன்னேற்றங்களை காண்பிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. விடயங்கள், ஆரம்பத்தில் ஓரளவு சாதகமாகத் தெரிந்தாலும்கூட, தற்போது மீளவும் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கான, நீண்ட வரிசையும் பொருள் தட்டுப்பாடும் அதிகரித் திருக்கின்றன. மீண்டும் ஒரு பதற்றமான சூழலே காணப்படுகின்றது. எவர் கதிரையில் இருந்தாலும்கூட, மாய ஜாலங்கள் மூலம், அதிசய மாற்றங்களை காண்பிக்க முடியாது.

இது தொடர்பில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியிருந்தோம். நிலைமைகள் விரைவாக சரிசெய்யக் கூடிய கட்டத்தில் நாட்டின் பொருளாதார நிலைமையில்லை. கடன்களை மட்டுமே நம்பியிருக்கும் ஒரு நாட்டில் எவர் பதவிலிருந்தாலும் இதுதான் நிலைமை. ரணில் விக்கிரமசிங்கவை விமர்சிப்பவர்களிடம் நாட்டை ஒப்படைத்தாலும்கூட, அவர்களாலும் உடனடியாக எதனையும் செய்துவிட முடியாது.

அவர்களும் சர்வதேச நாணய நிதியத்திடமும் இந்தியா மற்றும் சீனாவிடமும்தான் செல்வார்கள். இப்போது ரணில் எதனை செய்கின்றாரோ அதனைத்தான் அவர்களும் செய்ய வேண்டும். வேறு எந்தவொரு தெரிவும் இல்லை. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கும் சர்வதேச அறிமுகம் குறிப்பாக, மேற்குலக தொடர்புகளும், கொஞ்சம் அதிகமாக கைகொடுக்கக் கூடியதென்னும் அபிப்பிராயம் பலரிடமிருந்தது. அது தவறான பார்வையல்ல.

அந்த அடிப்படையில் மட்டும்தான் ரணில் பொருத்தமானவராகத் தெரிந்தார். ஆனால், ரணிலால் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை கொண்டு செல்ல முடியுமா என்னும் கேள்வியிருக்கின்றது. ஏனெனில், இதுவரையில், 21ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. இப்போதும் பொதுஜன பெரமுனவுக்குள் ரணில் தொடர்பில் அதிருப்திகளை வெளியிடுவோர் இருக்கின்றனர். அந்த வகையில், ரணில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றார் என்பது உண்மைதான். ஆனால், இதனால் யாருக்கு நெருக்கடி என்பதுதான் கேள்வி - ரணிலுக்கா அல்லது மக்களுக்கா?

ஒருவேளை ரணிலை தோற்கடித்து, பிரதமர் பதவியிலிருந்து அகற்றினாலும்கூட, ரணில் என்னும் தனிநபருக்கு எந்தவொரு நஷ்டமும் இல்லை. ஏனெனில், ரணில் கடந்த தேர்தலில் மோசமான தோல்வியை சந்தித்தவர். ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை வைத்துக் கொண்டு, பத்து மாதங்கள் காணாமல் போயிருந்தவர். அவர் மீளவும் பாராளுமன்றத்திற்குள் வந்த காலம் நாட்டை முன்கொண்டு செல்ல முடியாதளவுக்கு ராஜபக்ஷக்கள் வீழ்ச்சிடையத் தொடங்கிய காலமாக இருந்தது. நாட்டின் நிலைமைகளை அவ்வப்போது எச்சரித்துக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, தான் எச்சரித்ததுபோல் விடயங்கள் நடப்பதை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்.

அவர் விடயங்களை நன்கு கணித்து, திட்டமிட்டுத்தான், பத்து மாதங்கள் கழித்து, பாராளுமன்றம் வந்தாரா? அல்லது விடயங்கள் தற்செயலாக நடந்த னவா? இப்படியான கேள்விகளுக்கான பதில், அவரவர் ஊகத்துக்கு உரிய வையாகும். அதேவேளை, அவர், ராஜபக்ஷக்களை காப்பாற்றிக் கொண் டிருக்கின்றாரா? - இதுவும் அவரவர் ஊகத்துக்குரியது. ஆனால், வேறு எவரும் இல்லாத நிலையில்தான் ரணில் இந்த இடத்தில் இருக்கின்றார் என்பது மட்டும் உண்மை. மூன்று நேரம் உணவு கிடைப்பதை உறுதிப்படுத்துவதுதான் தனது முதன்மையான பணியென்று, பிரதமராக, பதவியேற்ற போது, ரணில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தற்போதைய நெருக்கடி நிலைமை அவரின் கூற்றுக்கு அமைவாக இல்லை. அதிகரித்துச் செல்லும் அடிப்படையான பொருட்களின் விலைகளை நோக்கினால், ஏழை மக்கள், ஒருவேளை உணவு உண்பது கூட பிரச்னையாகிவிடலாம் என்னும் நிலைமையே காணப்படுகின்றது. நிலைமை இந்த நிலையில் தொடர்ந்தால், ரணிலின் நியமனத்தை சாதகமாக நோக்கியவர்களும் சலிப்படையக்கூடும். ஆனால், எவரின் சலிப்பும், எவரின் விமர்சனமும், எவரின் கண்டனங்களும் நாட்டை முன்நோக்கி நகர்த்தப் போவதில்லை. ஏனெனில், நாட்டின் இன்றைய நிலைமை இவற்றுக்கெல்லாம் அப்பால்பட்டது.

# யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான சேவைகள் ‘கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம்’!

**அலசுவது இராஜதந்திரி**

*எதிர்வரும் ஜூலை முதலாம் திகதியிலிருந்து பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமான சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று கப்பல் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.*

*பலாலி சர்வதேச விமான நிலையமாக முழுமையாக இயங்கும் பட்சத்தில் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமடைவதோடு இந்தியாவுடனான ஆகாய வழி தொடர்புகளும் விரிவடையும்.*

*பலாலியிலிருந்து விமான சேவைகள் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் பின்னர், எண்பதுகளிலும் தென்னிந்திய நகரங்களான திருச்சிராப்பள்ளி, சென்னை ஆகியவற்றுக்கிடையே இடம்பெற்றிருந்தன. ஆனால், நாளடைவில் வடக்கு - கிழக்கு யுத்தம் விரிவடைந்ததையடுத்து பலாலி விமான நிலையம் பெரிதும் இராணுவத் தேவைகளுக்காகவே பயன்படுத்தப்பட்டு வந்தது.*

*இலங்கையில் அனைத்து திசைகளிலும் விமான நிலையங்கள் பிரிட்டிஷாரினது ஆட்சியின்போது நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அத்துடன், இலங்கையில் கொழும்பு, காங்கேசன்துறை , திருகோணமலை போன்ற இடங்களிலும் துறைமுகங்கள் பிரிட்டிஷாரினால் அமைக்கப்பட்டிருந்தன.*

*தற்போது பல தசாப்தங்களுக்கு பின்னர் மீளவும் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறைமுகம் ஆகியவற்றை மீளவும் இயங்க வைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இருந்தபோதிலும் கடந்த காலங்களில்கூட பலதடவைகள் பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான போக்குவரத்துக்காக பயன்படுத்துவது பற்றியும் காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச தரத்துக்கு உயரத்துவது பற்றியும் பேசப்பட்டுவந்தது.*

*ஆனால், அனைத்துமே பேச்சளவில் இருந்ததே தவிர செயலளவில் இருக்கவில்லை. இத்தகைய பின்னணியிலேயே மீளவும் பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்துக்கு உயர்த்துவது குறித்து தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது.*

*பலாலி விமான நிலையத்துக்கும் தென்னிந்திய விமான நிலையங்களுக்கும் இடையே போக்குவரத்து நிகழ்ந்தபோது வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மாணவர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள், யாத்திரீகர்கள் ஆகியோர் மிகவும் பயனடைந்தனர்.*

*இந்தியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே மட்டுமல்ல. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களுக்கிடையேகூட பலாலி விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து விரிவாக இடம்பெற்றிருந்தது.*

*ஆனால், தற்போது நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் பலாலி விமான நிலையம் சர்வதேச தரத்துக்கு உயர்த்தப்படவுள்ளது. பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்த முன்வந்துள்ளமையை நோக்கும் போது “கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்“ இடம்பெறுவது போலவே காப்படுகின்றது.*

*வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்ததுமே பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தும் நடவடிக்கையை ஆட்சியாளர்கள் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறில்லாமல் ஒரு பயனற்ற முயற்சியாக அம்பாந்தோட்டையில் மத்தள விமான நிலையத்தை சர்வதேச தரத்தில் மகிந்த அரசு அமைத்திருந்தது. ஆனால், அந்த விமான நிலையம் தற்போது ஒரு பயனற்ற விமான நிலையமாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. மத்தள விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு செலவிட்ட பணத்தை வடக்கே பலாலி நிலையத்தை புனர்நிர்மாணம் செய்வதில் செலவிட்டிருந்தால் இன்று பலாலி விமான நிலையம் நல்ல முறையில் இயங்கியிருக்கும்.*


*புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமல்ல. வெளிநாட்டு உல்லாசப் பயணிகள்கூட நிறையவே வந்திருக்க முடியும். ஏனெனில், பலாலியை அடுத்த காங்கேசன்துறை முதல் கீரிமலைப் பிரதேசம் வரையிலான கடற்கரையோரம் நிச்சயம் வெளிநாட்டவரை கவருவதாக அமைந்திருக்கும். பலாலியையும் காங்கேசன்துறையையும் ரயில் மூலமாக இணைத்திருக்கவும் முடியும்.*

*பலாலி சர்வதேச விமான நிலையமாக இயங்கும் பட்சத்தில் ஏராளமான புலம்பெயர்ந்த தமிழர்கள் யாழ்ப்பாணம் வர விரும்புவர். ஏனெனில், தற்போது பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இறங்கி யாழ்ப்பாணம் வருவதற்கு அவர்கள் பெருமளவு பணத்தை செலவிட வேண்டியவர்களாகவும் இருக்கின்றனர். எனவே, பலாலி விமான நிலையம் குறித்து தற்போது பொருளாதார நிலவரம் தளர்வடைந்ததையடுத்தே இலங்கை அரசு சிந்திக்க ஆரம்பித்திருப்பதை நோக்கும் போது ‘கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்’ செய்வது போன்றே விளங்குகின்றது.*

*பின்குறிப்பு:*

*இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் விமானப் படையினரால் 1947ஆம் ஆண்டு பலாலி விமான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஓடுபாதையின் மொத்த நீளம் 4,593 ஆகும். அகலம் : 98 அடிகளாகும். நாளடைவில் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் படிப்படியாக பொதுப் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படலாயிற்று.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 20 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - ஆனி 06
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சப்தமி




**மேடம்**
மனதில் இருந்து வந்த குழப்பம் விலகும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து சிந்திப்பீர்கள். மறைமுக எதிரியை கண்டறிவீர்கள். திட்டங்களை செயல்படுத்துவீர்கள்.

**இடபம்**
நீங்கள் நினைத்த செயல் இன்று நிறைவேறும். பொதுப்பணியில் ஆர்வம் உண்டாகும். உங்கள் செயலை மற்றவர்கள் புகழ்வார்கள். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்**
வசதிகள் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.தொழிலில் ஏற்பட்ட தடை சரி விலகும். குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக முயற்சி அனுகூலமாகும். மற்றவர்கள் வழியே லாபம் ஏற்படும்.

**கடகம்**
மனதில் தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் எதிர்பார்ப்பு இன்று நிறைவேறாமல் போகும். செயல்களில் தடை ஏற்படும்.

**சிம்மம்**
நிதானமாக செயல்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். மகிழ்ச்சியான நாள். நல்ல எண்ணம் ஒன்று நிறைவேறும்.நிரந்தர வருமானம் கிடைக்க முயற்சி எடுப்பீர்கள். செல்வாக்கு உயரும்.

**கன்னி**
உற்சாகத்துடன் செயல்படுவீர்கள் என்றாலும் உங்கள் உடல் நலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கு நடப்பதற்கான அறிகுறிகள் தென்படும். மகிழ்ச்சியான நாள். செலவு அதிகரிக்கும்.

**துலாம்**
வீட்டில் சாமர்த்தியமாக செயல்பட்டு தேவையை நிறைவேற்றிக் கொள்வீர்கள். நிதானமான நாள். தொலைதூர பயணம் மேற்கொள்வீர்கள். அதனால் எதிர்பாராத அலைச்சல் ஏற்படும்.

**விருட்சிகம்**
திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். மகிழ்ச்சியான நாளதொழில் குறித்த முயற்சியில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் குறையும்.புதிய முயற்சி ஒன்றில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு**
தைரியமும்,தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.நிம்மதியான நாள்.

**மகரம்**
உங்களுடைய நல்ல எண்ணம் இன்று நிறைவேறும். யோகமான நாள்.நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறும். ஒரு சிலர் வெளியூர் செல்வீர்கள்.

**கும்பம்**
உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை உருவாகும். கோவிலுக்கு செல்வீர்கள். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**
உற்சாகமாக செயல்படுவீர்கள். குடும்ப நலனில் அக்கறை காட்டுவீர்கள்.நண்பரிடம் மனச்சுமையை இறக்கி வைப்பீர்கள். நிம்மதியான நாள். நேற்று சந்திக்க நினைத்த உறவினர் ஒருவர் இன்று உங்களைத் தேடி வருவார்.

# ஒற்றைத் தலைமை விவகாரம் அ.தி.மு.கவில் போட்டி உச்சம்!

சென்னை, ஜூன் 20

அ. தி. மு. கவில் ஒற்றைத் தலைமை விவகாரம் தொடர்பாக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர் செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி கே. பழனிசாமி ஆகியோர் நேற்றும் தனித்தனியே ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

அ. தி. மு. கவில் தற்போது இரட்டைத் தலைமை முறையை முடிவுக்குக் கொண்டு வந்து ஒற்றைத் தலைமையாக மீண்டும் பொதுச்செயலாளர் பதவியைக் கொண்டுவர எடப்பாடி கே. பழனிசாமி முயற்சித்து வருகிறார். ஓ. பன்னீர்செல்வம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்.

வரும் ஜூன் 23ஆம் திகதி பொதுக்குழு நடைபெறவுள்ள நிலையில், பழனிசாமி மற்றும் பன்னீர்செல்வம் கடந்த நான்கைந்து நாட்களாக தனித்தனியாக ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இந்த ஆலோசனை நேற்றும் காலை முதல் நடைபெற்றது. எடப்பாடி பழனிசாமியுடன் ஆலோசனையில் ஈடுபட்ட தம்பிதுரை, பிறகு ஓ. பன்னீர்செல்வம் இல்லத்துக்குச் சென்று அவருடன்பேச்சு நடத்தி வருகிறார். இவரைத் தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் செங்கோட் டையனும் எடப்பாடி பழனிசாமி இல்லத்தில் ஆலோசனை நடத்திய பிறகு ஓ. பன்னீர்செல் வத்தைச் சந்திக்க அவரின் இல்லத்துக்கு சென்றார்.

இதைத் தொடர்ந்து, தம்பிதுரை மற்றும் செங்கோட்டையன் ஆகியோர் மீண்டும் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பர் என்று தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (ஐ)

# மேக்கேதாட்டு அணை பிரச்னை; டில்லிக்கு விரைவில் குழு செல்லும்!

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, ஜூன் 20

மேக்கேதாட்டு அணைத் திட்டத்துக்கு எதி ராக மத்திய அரசை வலியுறுத்த தமிழக அரசு குழு விரைவில் டில்லி செல்லும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில் மேக்கேதாட்டு அணை தொடர்பாக விவாதிக் கப்படும் என ஆணையத்தின் தலைவர் எஸ்.கே. ஹல்தர் கூறியிருந்த நிலையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வாதாரப் பிரச்னைகளில் ஒன்று காவிரிப் பிரச்னை. காவிரி நதிநீரில் தமிழகத்துக்கு முழு உரிமை உள்ளது. எனவே, காவிரி நீர் உரிமையைப் பெறுவதில் தி. மு. க. அரசு எந்த அளவுக்கும் சென்று போராடும் - வாதாடும் - தனது உரிமையை நிலைநாட்டும்.

காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைத் தடுக்கவும், நீர்வரத்தைக் குறைக்கவும் கர்நாடக அரசு தொடர்ந்து பல்வேறு செயல்களைச் செய்து வருகிறது. அதில் மிக முக்கியமானது மேக்கேதாட்டு அணை கட்டும் திட்டம்.

மேக்கேதாட்டு அணை கட்டும் கர்நாடக அரசின் முடிவுக்கு எதிராக தமிழ்நாடு அரசு தொடர்ந்து போராடி வருகிறது.

பிரதமரை நேரில் சந்திக்கும் போதும், காவிரி ஆணையக் கூட்டங்களிலும் மாநில அரசு தனது உறுதியான-இறுதியான நிலைப்பாட்டை எடுத்து வைக்கிறது. மேக்கேதாட்டு அணை கட்டக்கூடாது என தமிழ்நாடு சட்டப்பேரவையில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், காவிரி நதி நீர் விவகாரம் தொடர்பாக தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பை மத்திய அரசுக்கு உணர்த்தும் வகையில், நீர் வளத்துறை அமைச்சர் துரை முருகன் தலைமையில்



சட்டப்பேரவை கட்சித் தலைவர்களின் குழு விரைவில் டில்லி செல்லவுள்ளது. மத்திய நீர் வளத்துறை அமைச் சரைச் சந்தித்து மாநில அரசின் குழுவானது வலியுறுத்தும் என்று கூறியுள்ளார் முதல்வர் மு.க. ஸ்டாலின்.

# இராமநாதபுரம் கடற்கரையில் இலங்கைப் படகு ஒதுங்கியது!

இராமநாதபுரம், ஜூன் 20

இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி கடற்கரைப் பகுதியில் இலங்கை மீனவர்கள் பயண்படுத்தும் மீன்பிடி படகு ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கியதாக கடலோரக காவல் பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற கடலோர காவல் பொலிஸார் படகில் கடத்தல்காரர் யாரும் கடத்தல் பொருளகளை கொண்டு வந்தார்களா? அல்லது கடல் சீற்றம் காரணமாக நங்கூரம் அறுந்து படகு கடலில் மிதந்து வந்து கரை ஒதுங்கியதா என பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சொந்த விருப்பில் பாலியல் தொழில்; சட்ட நடவடிக்கையை தவிர்க்கவும்!

## சென்னை உயர்நீதிமன்றம் தெரிவிப்பு

சென்னை, ஜூன் 20

சொந்த விருப்பத்தின் பேரில் பாலியல் தொழிலில் ஈடுபடும் - 18 வயது கடந்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதை தவிர்க்க வேண்டும் என பொலிஸாருக்கு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய விபசார நிலையம் ஒன்றை சுற்றிவளைத்து சிலர் கைது செய்யப்பட்ட வழக்கிலேயே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்துள்ளது.

இந்த வழக்கில், பாலியல் தொழிலில் ஈடுபடுவோர் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் ஈடுபட்டால் அது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றம் ஆகாது என்றும், பாலியல் விடுதி நடத்துவது மட்டுமே சட்டவிரோதம் என்றும் வாதிடப்பட்டது.

இறுதியில், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. தீர்ப்பில், பாலியல் தொழில் நடைபெறும் விடுதிகளுக்கு சோதனைக்குச் செல்லும் பொலிஸார் அங்குள்ள பாலியல் தொழிலாளர்களை கைது செய்யவோ அல்லது துன்புறுத்தவோகூடாது. பாலியல் விடுதிகளை நடத்துவதுதான் சட்டவிரோதம்.

18 வயது கடந்த தனிப்பட்ட நபர்கள் தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் பாலியல் தொழிலில் ஈடுபட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை பொலி ஸார் தடுக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கோட்டா கோ கம நூலகத்திலிருந்து யாழ். நூலகத்துக்கு நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20

கோட்டா கோ கம நூலகத்தில் இருந்து யாழ்ப்பாண பொதுசன நூலகத்திற்கு நேற்று முன்தினம் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

யாழ். பொதுசன நூலகத்துக்கு மதியம் ஒரு மணியளவில் வந்த கோட்டா கோ கம போராட்டக் குழுவினர் ஒரு தொகுதி நூல்களை யாழ்ப்பாண பொதுசன நூலக நிர்வாகத்தினரிடம் கையளித்தனர்.

அத்துடன், யாழ். பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமையை நினைவுகூரும் வகையில் நூலக வாயிலில் மெழுகுவர்த்தி ஏந்தி நினைவு கூரலில் ஈடுபட்டனர்.

கோட்டா கோ கம போராட்டக்குழுவினர் யாழ் பொதுசன நூலகத்துக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத் துக்கும் கிளிநொச்சி மாணவர்களுக்கும் நூல்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# நடத்துநரை தாக்கிவிட்டு 50,000 ரூபாய் கொள்ளை!

வடமராட்சி, ஜூன் 20

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்தின் நடத்துநரை தாக்கி 50 ஆயிரம் ரூபாய் பணம் கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

புத்தூர் - ஆவரங்கால் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து பேருந்தில் ஏறிய இளைஞர் ஒருவர், ஆவரங்கால் பகுதியில் இறங்க முற்பட்டபோது, நடத்துநரை தாக்கிவிட்டு அவரின் கையிலிருந்த பணத்தை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதன்போது தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நடத்துனர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பணத்தை கொள்ளையடித்த சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் குறித்து பேருந்தின் சாரதி அச்சுவேலி பொலிஸாருக்கு முறைப்பாடு அளித்துள்ளார். (ஐ-2)




# யாழ்ப்பாணத்தில் அரசுக்கு எதிர்ப்பு; பீரிஸின் உருவப்பொம்மை எரிப்பு!

**யாழ்ப்பாணம், ஜூன் 20**

**யாழ்ப்பாணத்தில், வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸின் உருவ பொம்மையை எரித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரக அலுவலகம் முன்பாக நேற்று போராட்டம் இடம்பெற்றது.**

அரசாங்கம் தவறான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்துள்ளதாகக் கூறி, அதற்கு எதிராக நல்லூர் - கைலாசபிள்ளையார் கோவில் அருகில் நேற்று சிவில் அமைப்புக்கள் போராட்டம் ஒன்றை நடத்தின.

கைலாச பிள்ளையார் ஆலயம் முன்பாக முற்பகல் 10.30 மணியளவில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் பேரணியாக ஐக்கிய நாடுகள் அலுவலகத்தை வந்தடைந்தனர்.

இதன்போது இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தெரிவித்த கருத்துக்களை கண்டித்த அவர்கள், எதிர் கோஷங்களை எழுப்பினர் அத்துடன், அவரின் உருவ பொம்மையையும் தீயிட்டு எரித்தனர்.

போராட்டத்தின் நிறைவில் மனு ஒன்றையும் ஐ. நா. அலுவலகத்தில் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கைதிகளின் உறவுகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர் அரசியல் கட்சி உறுப்பினர்கள் பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஐ-3)

# உதைபந்தாட்டப் போட்டி களேபரத்தில் முடிந்தது!

வடமராட்சி, ஜூன் 20

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் பெரும் களேபரம் ஏற்பட்டுள்ளது.

வல்வை விளையாட்டுக்கழகத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டு கழகமும், கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் 2-0 என பாடும்மீன் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. இதைத் தொடர்ந்து, இரண்டு அணி ரசிகர்களும் மைதானத்தில் ஆக்ரோசமாக மோதிக் கொண்டனர்.

பாடும்மீன் ரசிகர்கள் சிலர், ரேஞ்சர்ஸ் ரசிகர்கள் பகுதிக்குள் சென்று வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட போது மோதல் வெடித்தது. அவர்கள் அநாகரிகமமான செய்கைகளில் ஈடுபட்டதாக ரேஞ்சர்ஸ் ரசிகர்கள் குற்றம் சுமத்தினர்.

சுமார் ஒரு மணிநேரமாக மைதானத்திற்குள் கொந்தளிப்பான நிலைமை காணப்பட்டது. இரண்டு தரப்பினரும் மோதிக் கொண்டதுடன், கல் வீச்சிலும் ஈடுபட்டனர். நீண்ட நேரத்தின் பின் நிலைமை சுமுகமானது. இந்த களேபரத்தினால் பரிசளிப்பு நிகழ்வும் இடை நிறுத்தப்பட்டது. (ஐ)



பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானவேளை...! (படங்கள்: ஐ. சிவசாந்தன்)

# விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்கள் எரிபொருள் தரக் கோரி போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 20

எரிபொருள் பெற்றுத் தருமாறு கோரி கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தைப் பயன்படுத்தி எரிபொருள் பெறலாம் என்று கூறப்பட்டபோதிலும், எரிபொருளை பெற முடியாத நிலைமை உள்ளது.



இந்நிலையிலேயே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். தூர இடத்திலிருந்து விடைத்தாள் திருத்தும் பணிக்கு வரும் ஆசிரியர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போராட்டத்தைத் தொடர்ந்து கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மதியம் 2 மணிக்கு பிறகு பிரத்தியேகமாக எரிபொருளை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அரசாங்க அதிபரால் உறுதியளிக்கப்பட்டது.

இதையடுத்து, ஆசிரியர்களின் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (ஐ-3)

# நீர் வெறுப்பு நோய்க்கு இந்த ஆண்டு 12 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 20

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நீர் வெறுப்பு நோய் காரணமாக 12 பேர் உயிரிழந்தனர்.

இந்த நோய்க்கான தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது என்று சுகாதார அமைச்சின் பொது சுகாதார கால்நடை சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எல். டி. கித்சிறி தெரிவித்தார்.

விலங்குகளுக்கு இதற்கான தடுப்பூசிகள் உள்ளதால், விரைவில் நாய்கள் உள்ளிட்ட செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசிகளை ஏற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில், நீர் வெறுப்பு நோயால் வருடத்தில் 20 முதல் 30 மரணங்களே பதிவாகின்றன. இருந்தபோதிலும் இந்த வருடத்தில் கடந்த 5 மாதங்களில் மாத்திரம் 12 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மன்னார் இரட்டைக் கொலை; 5 சந்தேகநபர்களுக்கும் மறியல்

மன்னார், ஜூன் 20

மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தில் கடந்த 10ஆம் திகதி சகோதரர்கள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஐவரையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த ஐவரும் கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். இவர்களை மன்னார் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோது, அனைவரையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மாட்டுவண்டிச் சவாரியில் ஏற்பட்ட தர்க்கம் வாள்வெட்டில் முடிந்ததில் யேசுதாசன் ரோமியோ, யேசுதாசன் தேவதாஸ் ஆகிய சகோதரர்கள் கடந்த 10ஆம் திகதி வெட்டிக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விசுவமடுவில் பதற்றநிலை; இராணுவம் துப்பாக்கிச் சூடு!

## கைகலப்பில் பலர் காயம்!

முல்லைத்தீவு, ஜூன் 20

**விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட குழப்ப நிலையின் தொடராக நடத்தப்பட்ட தாக்குதலில் மக்கள் இருவர் காயமடைந்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.**

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருடன் ஒருவர் தர்க்கத்தில் ஈடுபட்டார். இந்தத் தர்க்கம் கைகலப்பாக மாறியது என்றும் கூறப்பட்டது. இதேசமயம், தர்க்கத்தில் ஈடுபட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

எனினும், தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில் அங்கு கூடிய இளைஞர்களை இராணுவத்தினர் தாக்கியுள்ளனர். இதனால், ஆத்திரமடைந்த இளைஞர்கள் இராணுவத்தினரின் வாகனக் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளனர். இதில் சில இராணுவத்தினர் காயமடைந்தனர் என்று கூறப்படுகின்றது.

இதை நிறுத்த இராணுவத்தினர் மீண்டும் இளைஞர்களை தாக்கவே, அப்பகுதியிலிருந்த காவலரண் மீது இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்தே, இராணுவத்தினர் வானத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தி இளைஞர்களை கலைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு பொது மக்கள் ஒன்றுகூடிய நிலையில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்பட்டது.

இதையடுத்து, அந்தப் பகுதியில் நின்ற சிலரை இராணுவத்தினர் பிடித்து தடுத்து வைத்திருந்தனர் என்றும், எனினும் சில மணி நேரங்களின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் கூறப்படுகின்றது.

இந்தப் பதற்ற நிலைமையில் பலர் காயமடைந்தனர் என்றும் காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். இதேபோன்று, காயமடைந்த இராணுவத்தினர் சிலர் கிளிநொச்சி இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். பதற்ற நிலைமையை தொடர்ந்து அந்தப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம், இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# தமிழினத்தின் எதிர்காலத்தை வகுப்பதற்கான தருணம் இதுவே!

## சிவசக்தி ஆனந்தன் சொல்கிறார்

வவுனியா, ஜூன் 20



தென்னிலங்கை அரசாங்கம் பெரும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருக்கும் இந்தச் சூழலை தமிழ் மக்களின் விடிவுக்காக பயன்படுத்துவதற்கு அனைத்து தமிழ் தலைமைகளும் தலைப்பட வேண்டியது தவிர்க்க முடியாத விடயமென ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

தியாகிகள் தினத்தின் 32ஆவது ஆண்டு நினைவுதினமான நேற்று அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்த அத்தனை தியாகிகளுக்கும், ஏனைய அமைப்புக்களைச் சேர்ந்த போராளிகள் பொது மக்களுக்கும் நெஞ்சார்ந்த அஞ்சலிகளை செலுத்துகின்றோம், தற்போதை நிலையிலாவது அவர்களின் கனவுகளை நனவுகளாக்குவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டித் தலைப்பட்டிருக்கின்றோம்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றது. இதனால் அரசியல் நெருக்கடிகளும் ஏற்பட்டுவிட்டன. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி மற்றும் இதர நாடுகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டாலும் தற்போதைய பொருளாதார நெருக்கடி முற்றுமுழுதாக சீரடையும் என்று கூறுவதற்கு இல்லை.

கடன்களுக்கு மேல் கடன்களை பெற்றுக்கொள்ளும் முறையால் நாடு இன்னமும் மோசமான நிலைமைக்குள்ளேயே தள்ளப்படும் பேராபத்து இருக்கின்றது. இவ்வாறான தருணத்தில், பொருளாதார, அரசியல் நெருக்கடியில் இருக்கின்ற நிலையில் தமிழினத்தின் எதிர்காலம் சம்பந்தமாக, கோரிக்கைகள் சம்பந்தமாக எவ்விதமான நகர்வுகளையும் முன்னகர்த்துவது பொருத்த மற்றது என்ற தொரு தோற்றப்பாடு கட்டியெழுப்பபட்டுள்ளது.

இது தவறான நிலைப்பாடாகும். இதற்கு கடந்த கால அனுபவங்கள் பல உள்ளன. குறிப்பாக கூறுவதானால், போர் நிறைவுக்கு வந்தவுடன் இனப் பிரச்னைக்கான தீர்வு வழங்கப்படும் என்று ராஜபக்ஷக்கள் கூறினார்கள். பின்னர் போர் முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் நிறைவுக்கு வந்த போது, அவர்கள் போர் வெற்றிவாதத்தில் மிதந்தார்கள். இடிபாடுகளுக்குள் நல்லிணக்கம் பற்றி பேச முடியாது என்றார்கள்.

அபிவிருத்திகள் மேற்கொள்ளாது இனங்களுக்கு இடையில் பிரச்னைகளை தீர்க்க முடியாது என்றார்கள். இவ்வாறு கூறி தற்போது 13 ஆண்டுகள் நிறைவுக்கு வந்துவிட்டன. எதுவும் நடக்கவில்லை.

தற்போது இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியமான பொருட்களை வழங்கும் வெளிநாடுகளில் இந்தியா முதன்மையானதாக உள்ளது. ஏற்கனவே தமிழர்கள் சார்பில் இந்தியா, இலங்கையுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

அந்த வகையில் தற்போது நெருக்கடியான காலத்தில் இந்திய மத்திய அரசிடம், ஈழத் தமிழர்கள் விவகாரத்தை கையாள்வதற்காக அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டுவதற்கான உந்துதலை தமிழ்த் தரப்புக்கள் கூட்டாக கோரிக்கை முன் வைக்க வேண்டும்.

இந்த விடயத்தினை தமிழ்த் தரப்பு தந்திரோபய ரீதியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும். தற்போதைய சந்தர்ப்பத்தை முறை யாக பயன்படுத்துவதற்கு அனைவரும் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# வீட்டிலிருந்து பணி செய்யுங்கள் தனியாரையும் கேட்கிறது அரசு!

கொழும்பு, ஜூன் 20

எரிபொருள் நெருக்கடி அதிகரித்துள்ள நிலையில், வீடுகளில் இருந்து வேலை செய்யும் முறைமையை பின்பற்றுமாறு தொழில் அமைச்சு தனியார் துறையைக் கோரியுள்ளது.

இது தொடர்பில், அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை தனியார் துறையினரும் பின்பற்றுவதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாதென அமைச்சின் செயலாளர் ஏ. ஜே. விமலவீர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடி நிலை வழமைக்கு திரும்பும் வரை அரசாங்கத்துக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் தனியார் துறையிடம் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# சர்வதேச நாணய நிதியத்தின் குழு இன்று இலங்கை வருகை

கொழும்பு, ஜூன் 20

சர்வதேச நாணய நிதியத்தின் குழுவொன்று இன்று 20ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக அறிவித்துள்ளது.

இன்றையதினம் இலங்கை வரும் குழு எதிர்வரும் 30ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருந்து ஊழியர் மட்ட உடன்படிக்கையை எட்டுவது தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், மே 9 ஆம் திகதி முதல் மே 24 ஆம் திகதி வரையிலான முந்தைய மெய்நிகர் கலந்துரையாடலின்போது ஏற்பட்ட முன்னேற்றத்தைக் கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஏற்பாட்டின் மூலம் ஆதரிக்கப்படக்கூடிய பொருளாதார வேலைத்திட்டம் பற்றிய விவாதங்களைத் தொடரும் என்று இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் குழு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான அதன் உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எரிபொருள் நிலையத்தில் வாள்வெட்டு; வவுனியாவில் 4 பேர் காயம்; 2 பேர் கைது!

வவுனியா, ஜூன் 20

வவுனியா ஆண்டியாபுளியாளங்குளத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளதுடன், இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக வாகனங்கள் வரிசையில் நின்றிருந்தன. இதன்போது, இரு தரப்புகள் இடையே ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பாக மாறி வாள்வெட்டில் முடிவடைந்தது.

இந்த சம்பவத்தில் நான்கு பேர் காயமடைந்ததுடன், பேருந்து ஒன்று தாக்கப்பட்டதுடன், கப் ரக வாகனம் ஒன்றின் இருக்கை தீயிட்டு எரிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர். அத்துடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## அடுத்த வாரம் போராட்டங்கள்

ராஜித எம். பி.

கொழும்பு, ஜூன் 20
அரசாங்கத்துக்கு எதிராக அடுத்த வாரம் முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கபடவுள்ளன என்று பாராளுமன்ற உறுப்பிர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

ஜனாதிபதியும், பிரதமரும் தற்போதைய நிலையில் தோல்வியடைந்துள்ளனர். இதனால் இந்த அரசாங்கம் உடனடியாக பதவி விலக வேண்டும். மேலும், சர்வக் கட்சி அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதே தற்போது உள்ள ஒரே தீர்வு.

அத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் செயற்படுவது, அவர்களின் தொழில்துறைக்கு ஏற்படுத்தப்படும் இழுக்காகும். இவ்வாறான நிலைமை தொடரும் நிலையில், நாட்டில் பொது மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத நிலைமையே ஏற்படும்.

இதேவேளை, மக்கள் கோபமடையும் நிலை ஏற்படுமாயின், மே 9ஐ விட பெரும் சிக்கல்கள் நாட்டில் ஏற்படும் - என்றார். (ஐ)

# வவுனியாவில் எரிபொருள் கேட்டு ஏ-9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஜூன் 20

**ஏ -9 வீதியில் பயணித்த எரிபொருள் பவுஸரை முற்றுகையிட்டு வவுனியாவில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதையடுத்து நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர அந்தப் பகுதிக்கு இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.**

வவுனியா, பழைய பேருந்து நிலையம் முன்பாக உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த 4 நாட்களாக மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசையில் காத்திருந்தும் எரிபொருள் வரவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் ஏ - 9 வீதியில் பயணித்த எரிபொருள் பவுஸரை முற்றுகையிட்டு வீதியை வழிமறித்து நேற்று காலை 6.30 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ9 ஊடான வீதிப் போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரருடன் பேச்சு நடத்திய போதும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வீதியை விட்டு விலகிச் செல்லவில்லை. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் வரவைழைக்கப்பட்டனர்.




இதைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளும் இராணுவ உயர் அதிகாரிகளும், எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரும் பேச்சு நடத்தினர்.

இதன் பின்னர், அவசர தேவைக்காக சேமிக்கப்பட்ட 500 லீற்றர் பெற்றோலை ரூபாய் 500 வீதம் ஒருவருக்கு வழங்க இணக்கம் எட்டப்பட்டது. இதையடுத்து மக்கள் போராட்டத்தை நிறுத்தி பவுஸரை விடுவித்தனர்.

இதனையடுத்து இராணுவப் பாதுகப்புடன் எரிபொருள் பவுஸர் அங்கிருந்து சென்றதுடன், 500 லீற்றர் பெற்றோலும் அங்கிருந்தவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (ஐ)

# கோட்டாபய பதவி விலகும்வரை எங்களின் போராட்டம் தொடரும்!

## கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 20
நாட்டில் பொருளாதார பிரச்னையும் வாழ்வாதாரத்துக்கான தேவை கருதிய போராட்டங்களும் இடம்பெற்று வருவதால் கோட்டா கோ கம போராட்டம் தொய்வடைந்து காணப்படுகிறது. ஆனாலும் கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை எமது போராட்டம் ஓயாது என்று போராட்டக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

மேலும், கோட்டா கோ கம நூலகத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நூல்களை கொண்டு வந்திருக்கின்றோம். நாட்டை ஆட்சி செய்த மோசமான ஆட்சியாளர்களின் செயல்பாடுகள் காரணமாகவும் தவறான வழி நடத்தல் காரணமாகவும் எமது நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டது.

தவறான ஆட்சியால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன் பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். இலங்கையில் இரண்டு வருடங்களாக பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

எமது கோட்டா கோ கம நூலகத்துக்குக் கிடைத்த நூல்களை நாம் நாடளாவிய ரீதியில் கஷ்டப்படுகிற மாணவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானித்தோம். அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகில் உள்ள மிகவும் கஷ்டப்பட்ட ஒரு பகுதியில் ஒரு தொகுதி நூல்களை வழங்கினோம். இரண்டாவதாக நாம் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கின்றோம்.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்பொழுது நாம் பிறக்கவும் இல்லை. எங்கள் கண்முன்னே நாங்கள் அமைத்த போராட்டகளத்தை நெருப்பில் எரித்தார்கள் அதனை நாம் பார்த்துக் கொண்டிருந்தோம்.

எமது கோட்டா கோ கம நூலகம் எரிக்கப்படுமோ என அஞ்சியிருந்தோம். நூலகத்தை எரிப்பது என்பது சமூகத்தை வீழ்த்துவதற்கு முக்கியமானதாகும்.

அந்த வகையில் யாழ் பொதுசன நூலகத்துக்கும், யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத் துக்கும் கிளிநொச்சி மாணவர்களுக்கும் நூல்களை வழங்கவிருக்கிறோம். அத்துடன், காலிமுகத்திடல் கோட்டா கோ கமவில் இணைய வழியிலான பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றோம் - என்றனர். (ஐ)

# எரிபொருள் விநியோகத்தால் கல்வியங்காட்டில் குழப்பநிலை!

யாழ்ப்பாணம், ஜூன் 20
கல்வியங்காடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று மதியம் குழப்ப நிலை ஏற்பட்டது.

பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு சந்தைக் கட்டடத்தின் அருகேயுள்ள எரிபொருள் நிலையத்தில் பெற்றோல் விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து அதிகாலை முதல், சுமார் 3 கிலோமீற்றருக்கும் நீளமான வரிசையில் மக்கள் பெற்றோலுக்காக வாகனங்களுடன் காத்திருந்தனர்.

முற்பகல் 10.45 மணியளவிலேயே குறித்த நிலையத்துக்கு பவுஸரில் பெற்றோல் வந்தது.

இந்நிலையில், வந்த பெற்றோலை சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு வழங்குமாறு தமக்கு உத்தரவு வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். இதையடுத்து அதிகாலை முதல் வரிசையில் காத்திருந்தவர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.

இதையடுத்து எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்பட்டது. எனினும், சுமூக நிலை ஏற்படுத்தப்பட்டு பின்னர் பெற்றோல் விநியோகம் இடம் பெற்றது. (ஐ)

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு; எச்சரிக்கையாக செயல்படுக!

## வேலை வாய்ப்பு பணியகம் அறிவுறுத்தல்

கொழும்பு, ஜூன் 20
ருமேனியா, இஸ்ரேல், ஜப்பான் மற்றும் தென்கொரியா போன்ற நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று பல்வேறு சமூக ஊடகங்கள் ஊடாக பொய்யான தகவல்களை பரப்பி மோசடியில் ஈடுபடும் குழுவினர் பணம் பறிப்பதற்கு முயற்சிக்கின்றனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரித்துள்ளது.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மற்றும் குறித்த நிறுவனங்களுக்கு கிடைத்துள்ள வேலைகள் பற்றிய அனைத்து தகவல்களையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் இணையதளத்தில் காணலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்வதற்கு, எந்தவொரு தரப்பினருக்கும் பணம் அல்லது கடவுசீட்டுகளை வழங்குவதற்கு முன்னர் குறித்த நிறுவனங்களின் சட்டபூர்வமான தன்மை தொடர்பில் அவதானம் செலுத்துமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறுவுறுத்தியுள்ளது.

எனவே, இது குறித்து பொதுமக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

# சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்படும் அபாய நிலைமை!

கொழும்பு, ஜூன் 20
போதுமான அளவு மசகு எண்ணெய் இல்லாமையால் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வரும் வியாழக்கிழமையின் பின்னர் மூடப்படும் நிலைமை உருவாகியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கை கடற்பரப்புக்கு அப்பால் மசகு எண்ணெய் தாங்கிய கப்பல் நங்கூரமிட்டுள்ளது. அதனை விடுவிப்பதற்கான பணப் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என்று பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

90,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெயை ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதை அடுத்து, 70 நாட்களுக்குப் பின்னர் கடந்த மே மாதம், சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம், தனது பணிகளை முன்னெடுத்திருந்தது.

இதேவேளை , இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் சுத்திகரிப்பு பணிகள் நடைபெற்று வருகின்றபோதிலும், இந்தப் பணிகள் இன்னமும் 5 தினங்களுக்குள் முடிவடையும். அதற்கு முன்னதாக மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், சப்புகஸ்கந்தை எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மீண்டும் மூட வேண்டி ஏற்படும் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# திருச்சி முகாமில் இலங்கை தமிழர்கள் தொடர் போராட்டம் - பின்னணி என்ன?

- ஜோ. மகேஸ்வரன்




தமிழ்நாட்டின் திருச்சியில் உள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் உள்ளிட்ட வெளிநாட்டினர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் சிலர், தங்களை விடுதலை செய்யக் கோரி தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அடிக்கடி போராட்டம் நடப்பது ஏன்? இது குறித்து அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள்?

தமிழ்நாட்டில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்படும் வெளிநாட்டினர், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்படுகின்றனர். இதன்படி, இலங்கைத் தமிழர்கள் 104 பேர் மற்றும் நைஜீரியா, பல்கேரியா, வங்கதேசம், இந்தோனீசியா உட்பட வெளி நாட்டினர் என மொத்தம் 145 பேர் தற் போது திருச்சி சிறப்பு முகாமில் உள்ளனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை முடிந்து, விடுதலை செய்யப்பட்டும் வரை சிறப்பு முகாமில் தங்க வைக்கப்படுவார்கள். சிறப்பு முகாமிற்குள் சமைத்து உண்ணும் வசதி, செல போன் பயன்படுத்திக் கொள்வது உள்ளிட்டவை அனுமதிக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர்களுக்கு தினசரி உணவுப் படியும் வழங்கப்படுகிறது.

குறிப்பாக, சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயன்றது, போலி கடவுச் சீட்டு முறைகேடு உள்ளிட்ட வழக்குகளில் இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டு சிறப்பு முகாமில் உள்ளனர்.

தங்களை விடுதலை செய்து, குடும்பத்தினருடன் வாழ வைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இவர்களில் பலர் உண்ணாவிரதம், தற்கொலை முயற்சி என பல வடிவங்களில் அடிக்கடி போராட்டங்களை நடத்துகிறார்கள்.

### மீண்டும் போராட்டம்

இந்நிலையில், திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள், தங்களை விடுதலை செய்யக் கோரி கடந்த மே மாதம் 20ஆம் திகதி மீண்டும் போராட்டத்தை தொடங்கினர். இலங்கைத் தமிழர்கள் டிளச்சன், கபிலன், எப்சிபான், தினேஷ் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தினால், உடல் நலம் பாதிக்கப்பட்ட 4 பேர் திருச்சி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, மேலும் 5 பேருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இவர்கள் 9 பேரும் மருத்துவர்களின் அறிவுறுத்தலால், உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டனர். ஆனாலும், சிறப்பு முகாமில் உள்ள மற்ற இலங்கைத் தமிழர்கள் போராட்டத்தை தொடர்கின்றனர்.

இதையடுத்து, தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தால் உடல் நலம் பாதிக்கப்பட்ட மகேந்திரன், மயூரதன் ஆகிய இருவரும் தற்போது, திருச்சி அரசு பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நான்கு பேர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்திலும் 60 பேர் காத்திருப்பு போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளதாக இலங்கை தமிழர்கள் தெரிவித்துள்ளனர்.

### கோரிக்கைகள் என்ன?

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெர்ணாண்டோ கூறுகையில், “விசா காலம் முடிந்து தங்கியிருந்ததாகவும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாகவும் கடந்த 2020ம் ஆண்டு ஆகஸ்ட் 13ம் திகதி கைது செய்யப்பட்டேன். வழக்கு முடிந்து 3 மாதங்களா



கியும் என்னை விடுதலை செய்யவில்லை.

சிறப்பு முகாமில் இருக்கும் காலத்தை வழக்கின் தண்டனைக் காலமாக கருத வேண்டும். வழக்கு முடிந்தவர்களை விடுதலை செய்து, வழக்கமான முகாம், வெளிப்பதிவு, இலங்கைக்கு என அவர்கள் விரும்பும் இடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்திதான் இந்த போராட்டத்தை நடத்தி வருகிறோம்.” என்றார்.

மேலும், “பலர் பொய் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளனர். வழக்கு முடிந்து ஆண்டுக் கணக்கில் இங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். தொடர் போராட்டங்களை நடத்தி வந்தாலும் காவல் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் கண்டு கொள்ளவே இல்லை. உயிருக்கு ஆபத்த நிலை ஏற்பட்ட பிறகே மருத்துவ வசதி கூட கிடைக்கிறது. எனவே தமிழ்நாடு முதலமைச்சர் இதில் தலையிட்டு எங்களுக்கு உதவ வேண்டும்,” என்றார்.

### “மனித உரிமை மீறல்” - இலங்கைத் தமிழர்

அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ள இலங்கைத் தமிழர் மகேந்திரன், கூறுகையில், “ கடந்த 2014ஆம் ஆண்டு சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்றதாக கைது செய்யப்பட்டேன். என் மீதான வழக்கு முடிந்தும் விடுதலை செய்யவில்லை. இதனால் 8 ஆண்டு களாக சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளேன். ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி சிறப்பு முகாமிலேயே அடைத்து வைத்துள்ளனர்.

உறவினர், குடும்பத்தினரை காண முடியாமல் தவித்து வருகிறேன். அதிகாரிகளே நீதி மன்றத்தை அவமதிக்கிறார்கள். மனித உரிமை மீறலை செய்கிறார்கள்.

பல முறை அறவழிப் போராட்டங்களை நடத்தியும் பயன் இல்லை. அதிகாரிகளும் கண்டு கொள்வதேயில்லை. சிறப்பு முகாமில் உள்ளவர்களை விடுதலை செய்வதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. ஆகை யால்தான் மீண்டும் மீண்டும் போராட்டங்களை நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது,” என்றார்.

மேலும், “தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கு பொய் என்று நான் நிருபித்துள்ளேன். இதனால், என்னை பழிவாங்க வேண்டும் என்று, பொய்யான காரணங்களை சொல்லி என்னை சிறப்பு முகாமிலேயே முடக்கி வைத்துள்ளனர். எட்டாண்டுகளாக சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதற்கு என்ன இழப்பீடு கொடுக்கப் போகிறார்கள்? என் இளமையே தொலைந்து போனாலும், பல்லாயிரம் மரக் கன்றுகளை வளர்த்து விநியோகித்து வருகிறேன். அவைகளாவது சுதந்திர காற்றை சுவாசிக்கட்டும்,“ என்கிறார் மகேந்திரன்.

### சீமான் வலியுறுத்தல்

“சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இலங்கைத் தமிழர்களின் வதை கூடமாக உள்ள சிறப்பு முகாம்களை மூட வேண்டும். காவல் துறையின் க்யூ பிரிவை கலைக்க வேண்டும்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும்“ என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

### அதிகாரிகள் தரும் விளக்கம்

இது குறித்து தமிழ்நாடு காவல் துறையின் க்யூ பிரிவு அதிகாரி ஒருவரிடம் கேட்டதற்கு, “திருச்சியில் உள்ளது இலங்கைத் தமிழர்களுக்கான சிறப்பு முகாம் அல்ல. குற்றச் செயல்களில் கைது செய்யப்பட்டு, பிணையில் இருக்கும் வெளிநாட்டினரை தங்க வைத்துள்ள முகாம். இதில், இலங்கை மட்டுமின்றி பிற நாட்டினரும் உள்ளனர்.

பிணையில் வெளிவரும் வெளிநாட்டினர் தப்பிச் சென்று விடுவதால், இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஆனால், சிறப்பு முகாமில் உள்ளவர்கள் தவறான தகவல்களை சொல்கிறார்கள். யாரையும் பொய் வழக்கில் கைது செய்யவில்லை. ஒரு வழக்கு முடிந்திருந்தாலும் வேறு வழக்கு முடியாமல் இருக்கும். ஆகையால் அவர்கள் சிறப்பு முகாமில் தங்க வைக்கப்படுகின்றனர். வழக்கு முடிந்த சிலரை விடுதலை செய்வதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன” என்றார்.



இது குறித்து அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் ஜெசிந்தா லாசரஸிடம் கேட்டதற்கு, “தமிழ்நாட்டில் மொத்தம் 106 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 58,325 பேர் தற்போது உள்ளனர்.

ஆனால், திருச்சி சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்கள் மட்டுமே உள்ளனர். மறுவாழ்வு முகாம்களில் இருந்து, குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட, கிட்டத்தட்ட 30 பேர் மட்டுமே சிறப்பு முகாமில் உள்ளனர்.

மற்றவர்கள் வெளிப்பதிவு மற்றும் சட்ட விரோதமாக வந்த போது கைது செய்யப்பட்டவர்கள். சிறப்பு முகாம்களில் உள்ளவர்களை விடுதலை செய்வது குறித்து உள் துறையும் மாவட்ட ஆட்சியரும்தான் முடிவு செய்ய முடியும்“ என்றார். (பிபிசி)



# பாரம்பரிய இனத்துவ-தேசியவாதத்தின் தோல்வி?

யதீந்திரா

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, இனத்துவ மற்றும் மதப்பிணைப்பு தேசியவாதம் தொடர்பில் கேள்விகளை முன்நிறுத்து கின்றது. கோட்டபாய ராஜபக்சவின் வெற்றியானது, சிங்கள பௌத்த-தேசியவாதத்தின் மீளெழுச்சியாகவே நோக்கப்பட்டது. கோட்டபாயவும், சிங்கள-பௌத்த இனத்தின் நவீன காவலானாகவே தன்னை முன்னிறுத் திக்கொண்டார்.

இந்த பின்புலத்தில்தான், தன்னையொரு சிங்கள-பௌத்த தலைவனாக பிரகடனம் செய்தார். நான்தான், நீங்கள் தேடிய தலைவன் என்றார். இவைகளெல்லாம் சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் எழுச்சிக் காக காத்துக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் புத்துணர்வையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

கோட்டபாய ஒரு விடயத்தை திரும்பத்திரும்ப வலியுறுத்திக் கொண்டிருந்தார். அதாவது, தமிழ் மக்களுக்கென்று பிரத்தியேக அரசியல் பிரச்சினைகள் இல்லை - அவர்களுக்கு பொருளாதார பிரச்சினைகள் மட்டும்தான் இருக்கின்றது. இந்த அடிப்படையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான, 13வது திருத்தச்சட்டத்தை கூட நீக்க வேண்டு மென்பதில் கோட்டபாய ஆசை கொண்டிருந்தார். இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஸ் வர்தன், முன்னிலையிலேயே, 13வது திருத்தச்சட்டத்தில் பிளசும் மைனசும் இருப்பதாக குறிப்பிட்டார். இதன் மூலம், 13வது திருத்தச்சட் டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாதென்பதை சூசகமாக வெளிப் படுத்தினார்.

கோட்டாவின் அணுகுமுறைகளை, லிபியாவின் சர்வாதிகாரியாக இருந்த முகமத் கடாபியின் கருத்தியலோடு ஒப்பிட்டலாம். கடாபியின் பார்வை யில், தேசமென்பது, ஒரு பெரிய பழங்குடி- அதாவது ஒரு பெரிய குடும்பம் - அவ்வாறானதொரு குடும் பத்திற்கு பிரத்தியேக அதிகாரப்பகிர்வு மற்றும் பிரத்தியேக நிர்வாக நடை முறைகள் அவசியமில்லை. ஆனால் கடாபிக்கும் கோட்டபாயவிற்கும் இடையில் ஒரு அடிப்படையான வேறுபாடுண்டு.

அதாவது, கோட்டபாயவின் பார்வையில் சிறிலங்கா (அப்பே ரட்ட) என்பது, ஒரு பெரிய சிங்களப் பழங்குடி அல்லது பெரிய சிங்கள குடும்பம். இந்த கருத்தியலிலிருந்து தான், தமிழ் மக்களுக்கென்று பிரத்தி யேக பிரச்சினைகள் இல்லையென்னும் கோட்டபாயவின் பார்வை வடிவம் பெற்றது.

ஆனால் இன்றைய நிலைமை என்ன? தமிழ் மக்களுக்கு பொருளாதார ரீதியான பிரச்சினை மட்டும்தான் இருப்பதாக குறிப்பிட்ட, கோட்டபாய ராஜபக்ச, சிங்கள மக்களின் பொரு ளாதார பிரச்சினைகளை கையாள முடியாமல் படு தோல்வியடைந்திருக் கின்றார். அன்னிய சக்திகளுக்கு நாட்டை காட்டிக் கொடுக்க முற்படு வதாக எவர் மீது, விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதோ, இப்போது, அந்த ரணில் விக்கிரமசிங்கவின் தய வின் மூலம்தான் நாட்டை முன்நோக்கி கொண்டுசெல்ல முடியுமென்னும் நிலைக்கு கோட்டபாய கீழிறங்கியிருக் கின்றார்.

உண்மையில் கோட்டபாய ராஜ பக்சவின் தோல்வியென்பது - கோட்ட பாயவின் தோல்வியல்ல - மாறாக, அவர் பிரதிநித்துவப்படுத்திய சிங்கள-பௌத்த தேசியவாதத்தின் தோல்வி யாகும். ஒரு நெருக்கடி நிலையில் நாட்டை தூக்கிநிறுத்துவதற்கு சிங்கள-பௌத்த தேசியவாதம் கைகொடுக்க வில்லை. ஏனெனில், உலகத்தோடு ஊடாடகக் கூடிய ஆற்றலை சிங்கள-பௌத்த தேசியவாதம் கொண்டிருக்க வில்லை. ஏனெனில், அது, தாராளவாத விழுமியங்களை கண்டு அஞ்சுகின்றது.



இலங்கையின் பௌத்த பீடங்கள் கிட்டத்தட்ட, காவிதரித்த தலிபான்கள் போன்றே செயற்படுகின்றனர். இலங் கைத் தீவை கற்கால நிலையில் பேணிப்பாதுகாக்கவே விரும்புகின்றனர். இலங்கை முன்நோக்கி பயணிப்பதை ஏதோவொரு வகையில் தடுக்கும் சக்திகளாகவே தொழிற்படுகின்றனர். இதன் விளைவுகளையே, தற்போது இலங்கைத் தீவு எதிர்கொண்டு வருகின்றது.

இலங்கையின் தேசிய வாதங்களின் எழுச்சியை உற்று நோக்கினால் - ஒரு அடிப்படையான உண் மையை நாம் காணலாம். அதாவது, இனவெறுப்பே, தேசியவாத எழுச்சியின் அஸ்திபாரமாக இருப்பதை காணலாம். இது தமிழ் தேசியவாதத்திற்கும் பொருந்தும். ஆனால் ஆரம்பகால தமிழ் தேசிய எழுச்சியானது, சாதாரண சிங்கள மக்களை எதிர்ப் பதாக இருக்கவில்லை. சிங்கள மக்களையும் சிங்கள ஆளும் வர்கத்தையும் பிரித்து நோக்குவதாகவே இருந்தது. சிங்கள மக்களுடன் கூடிவாழும் வாழ்வையே அவாவி நின்றது.

ஆனால் தமிழ் தேசிய அரசியல் ஆயுதமயப்படுத்தப்பட்ட பின்னர் - அதாவது, ஆயுதபலத்தின் மூலம்தான் உரிமைகளை வென்றெடுக்க முடியு மென்னும் அரசியல் புறநிலைமை உரு வாகிய பின்னர், முன்னைய அணுகு முறைகள் மாற்றமடைந்தது. சிங்கள ஆளும் வர்க்கத்தையும் சிங்கள மக்க ளையும் பிரித்து நோக்கவேண்டிய தில்லை என்னும் பார்வை மேலோங்கி யது. குறிப்பாக, விடுதலைப் புலிகளின் தலைமையிலான ஆயுத போராட்டத் தின் போது, சிங்கள மக்களும் சிங்கள அரசியல் சமூகமும் வேறுவேறல்ல என்னும் பார்வை மேலோங்கியது. இராணுவ நெருக்கடிகள் அதிகரிக்கின்ற போது, சிங்கள பொதுமக்களையும் இராணுவ இலக்காகக் கொள்ளலாமென் னும் பார்வை அரசியல்மயப்படுப்பட் டது. இந்த கருத்தியலின் அடிப்படை யில்தான், விடுதலைப் புலிகளால், சிங்கள பொது மக்கள் மீது, மேற்கொள் ளப்பட்ட தாக்குதல்களை நோக்க வேண் டும். விடுதலைப் புலிகள் காலத்தைய



தமிழ் தேசியவாத எழுச்சியென்பது, சிங்கள எதிர்ப்பின் உச்சமாகவே இருந்தது. சிங்களவர்களோடு சேர்ந்து வாழமுடியாதென்பதே விடுதலைப் புலிகள் தலைமையிலான தமிழ் தேசிய நிலைப்பாடாகும்.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியோடு, விடுதலைப் புலிகளால் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழ் தேசியவாதமும் பெருமளவிற்கு வீழ்சியுற்றுவிட்டது. இன்றைய தமிழ் தேசியவாத அரசியல் ஆரம்பகால மிதவாத தமிழ் தேசிய நிலைப்பாட்டையே பிரதிபலிக்கின்றது. அதாவது, ஐக்கிய இலங்கைக்குள் வாழும் நிலைப்பாடு. ஆனால் போர் வெற்றிவாத ராஜபக்சக்களினால் புத்தொழுச்சிபெற்ற சிங்கள-பௌத்த தேசியவாதமோ, மீளவும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை காலால் மிதித்தது.

மீளவும் தமிழர் வெறுப்பை தெற்கில் பரப்பி, தாங்கள் தொடர்ந்தும் அதிகாரத்திலிருப்பதற்கான தந்திரோ பாயங்கள் தொடர்பிலேயே ராஜ பக்சக்கள் சிந்தித்தனர். 2019தேர்தல் வெற்றியை தொடர்ந்து, கோட்டபாய ராஜபக்ச, மகிந்தவின் காலத்து இனவெறுப்பு சிங்கள-பௌத்த தேசிய வாதத்தை அதன் இரண் டாம் நிலைக்கு எடுத்துச் செல்ல முற்பட்டார். உள்ளூரில் அதிகாரத்தை கைப்பற்றுதலென்னும் ஒரேயொரு இலக்கை மட்டுமே கொண்டு கையா ளப்பட்ட சிங்கள-பௌத்த தேசியவாத கருத்தியல், புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது, வெறும் புஸ்வானமென்னும் உண்மை இப்போது வெளிச்சத்திற்கு வந்திருக் கின்றது.


அந்த வகையில் சிங்கள-பௌத்த தேசியவாதத்தால் நாட்டை முன்நோக்கி கொண்டுசெல்ல முடியா தென்னும் உண்மையும் இப்போது பட்டவர்த்தன மாகியிருக்கின்றது.

இப்போது இரண்டு தேசியவாதங் களின் வீழ்ச்சியனுபவம் இலங்கைக்கு கிடைத்திருக்கின்றது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து, பிரிவினைவாத தமிழ் தேசியவாதம் வீழ்சியுற்றது. ராஜபக்சக்களின் வீழ்ச்சியை தொடர்ந்து, பாரம்பரிய தமிழர் விரோத சிங்கள- தேசியவாதத் தின் தோல்வி வெளிப்பட்டிருக்கின்றது.


மேற்படி, இரண்டு தோல்வி அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்வதன் மூலம் தான் இலங்கைத் தீவு முன்னோக்கி பயணிக்க முடியும். இதில் அதிக கடப்பாடும், பொறுப்பு ணர்வும், பெரும்பான்மை யினர் என்னும் வகையில், சிங்கள புத்திஜீவிகளுக்கும், சிங்கள சிவில் சமூகத்தின ருக்குமே உண்டு. சிலர் இவ்வாறானதொரு வாதத்தை முன்வைக்கலாம் மீளவும் ராஜபக்சக்கள் எழுச்சியுற்றால் என்ன செய் வது? பதில் இலகுவானது, ராஜபக்சக்கள் போன்ற அரசியல் குழுவினரால், ஒரு போதும், தாராளவாத சிந்தனைகளை மக்கள் மத்தியில் விதைக்க முடியாது. இன வெறுப்பும், மதவாதமுமே அவர்களது அரசியல் மூலதனமாக இருக்கும். அவ்வாறானவர்கள் எழுச்சியுற்றால், இப்போது நாடு என்ன நிலையிலிருக்கின் றதோ - அதுவே மீளவும் நிகழும். இலங் கைக்கு - சிங்களவர்களுக்கு மட்டுமல்ல, தமிழர்களுக்கும், தராளவாத சிந்தனை களை முன்னிறுத்தக் கூடிய, உலகத் தோடு ஊடாடக்கூடிய, தலைமைகளே தேவை. கடுப்போக்கு வாதங்கள் ஒரு போதுமே பயனளிக்காது. தேசியவாதம் தொடர்பான புதியதொரு உரையாடல் தமிழ் சூழலுக்கு தேவை.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37. 
சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?

1) 2) 3)


38. 
காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3  4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அஃறிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அஃறிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1** **38. 2** **39. 1** **40. 2**

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

கல்வி tv CHANNEL-1

**20.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**20.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# குடும்பத் தகராறால் தாக்குதல் தந்தை, மகன் மருத்துவமனையில்!

வாழைச்சேனை, ஜூன் 20

குடும்பத் தகராறால் தாக்குதலுக்கு இலக்கான தந்தையும் மகனும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குடும்பத்தகராறு காரணமாக தந்தைக்கும், மகனுக்கும் ஒரு குழுவினர் இரும்புக் கம்பியால் மறைந்திருந்து தாக்கினர் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் படுகாயமடைந்த தந்தையும், மகனும் வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# டெங்கு நோயின் தாக்கம் மட்டக்களப்பில் அதிகரிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பில் மிக வேகமாக டெங்கு நோய் பரவி வருதாக மட்டக்களப்பு சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் இ. உதயகுமார் தெரிவித்தார்.

எனவே, அதனைக் கட்டுப்படுத்தும் துரித நடவடிக்கைகளை சுகாதார பகுதியினர் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

இதன்படி நேற்று ஞாயிறுக்கிழமையும், முதல்நாளான சனிக்கிழமையும் பல இடங்கள் கண்டறியப்பட்டு 40 வீடுகள் மற்றும் கடைகளில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருந்த 7 வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# மட்டக்களப்பு வந்த வான் திருமலையில் விபத்து!

## நால்வர் காயங்களுக்கு இலக்கு

திருகோணமலை, ஜூன் 20

திருகோணமலை ஹபரணை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை ஹபரணை பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

குறித்த பகுதியில் பயணித்த வான் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த லொறி ஒன்றுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த வான் ஒன்றும் திருகோணமலையிலிருந்து குருநாகல் நோக்கி பயணித்த லொறியுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகின.

சம்பவம் தொடர்பில் ஹபரணை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்!

திருமலை, ஜூன் 20

திருகோணமலை - அக்போபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வீதியால் சென்ற ஒருவரை காட்டு யானை தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக அக்போபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்த டபிள்யு எம். சுனில் (42) என்பவரே உயிரிழந்தார்.

கந்தளாயில் இருந்து மெதிரிகியவுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற போதே வீதியை மறித்து காட்டு யானை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்கள் எரிபொருள் கேட்டுப் போராட்டம்!

மட்டக்களப்பு, ஜூன் 20

**எரிபொருள் வழங்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டத்தில் கா. பொ. த. சாதாரண தர பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் நேற்கு பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். எனினும், மட்டக்களப்பு அரச அதிபர் வழங்கிய உறுதிமொழிகளை அடுத்து இந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது.**

நேற்றைய தினம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரிக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்ட பேரணியானது ஆரம்பமானது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் பொன்னுத்துரை உதயரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், க. பொ. த சாதாரண பரீட்சை மதிப்பீட்டு பணியில் ஈடுபட்ட சுமார் 1200 ஆசிரியர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர தேசிய பாடசாலை, புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலை, புனித மைக்கல் கல்லூரி போன்ற பரீட்சை மதிப்பீட்டு நிலையங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களே ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு, எரிபொருள் வழங்குவதில் இலகுவான பொறிமுறையை வழங்கவேண்டுமென கோரிக்கையை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையை நடைமுறைப்படுத்தி, பரீட்சை மதிப்பீட்டு பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்களின் மனநிலையை குழப்பி கல்வியை சீரழிக்காதே, பரீட்சை மதிப்பீட்டாளர்களுக்கு உடன் எரிபொருள் வழங்கு" என சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆசிரியர்கள் பேரணியாக சென்றனர்.

இந்தப் பேரணி மட்டக்களப்பு நகரம் ஊடாக சென்று மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தை சென்றடைந்து அதனை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்தை முற்றாக முடக்கிய போராட்டக்காரர்கள் அங்கு தமக்கான எரிபொருளை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது தமக்கு அந்த அதிகாரம் இல்லையெனவும், தமது சேவைக்கு இடமளிக்குமாறும் அவ்வாறு இல்லாவிட்டால் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்த வேண்டிய நிலையேற்படும் என மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்ததை தொடர்ந்து, ஆர்ப்பாட்ட பேரணியானது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை சென்றடைந்தது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகம் முன்பாக ஆர்ப்பாட்ட பேரணி சென்ற நிலையில், அங்கு வாயில்கதவுகள் பூட்டப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. அரச அதிபருடன் ஆசிரியர் பிரதிநிதிகள் ஐவர் பேச்சு நடத்தினர். இதையடுத்து, விடைத்தாள் மதிப்பீட்டு பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு 5 லீற்றர் பெற்றோல் வழங்குவது அல்லது அவர்களுக்கான போக்குவரத்து ஒழுங்கை செய்து வழங்க அரச அதிபர் உறுதியளித்தார். இதைத் தொடர்ந்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ஐ)

# கோறளைப்பற்று பிரதேச சபையை நவீனமயமாக்கும் திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூன் 20

கனடிய உதவியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற உள்ளூர் பெண் தலைமைத்துவத்தை வலுவூட்டுவதன் மூலம் உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளை நவீனமயமாக்கும் செயல் திட்டத்தின் ஆரம்ப வைபவம் கோறளைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர் சோபா ஜெயரஞ்சித் தலைமையில் பேத்தாழை குகநேசன் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள 327 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து 5 உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், கோறளைப்பற்று பிரதேச சபை வாழைச்சேனையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் பெண்களின் ஆளுமையை விருத்தி செய்வதுடன் அதன் ஊடாக உள்ளூராட்சி மன்ற சேவையை மேம்படுத்தி வினைத்திறனான சேவையை பொது மக்களுக்கு வழங்குதலாகும்.

நிகழ்வில் 6 வருடத் திட்டத்தின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதேச சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பிரதேச சமூக மட்ட அமைப்பின் உறுப்பினர்கள் என 17 நபர்கள் கொண்ட செயல்திட்டத்தின் செயல்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்கள் தவிசாளரை தலைவராக கொண்டு எதிர்கால தேவைகளை அடையாளம் கண்டு நடைமுறைப்படுத்துவதற்காக செயல்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாணவரால் தூய்மையானது மட்டக்களப்பு மாநகர வாவி!

மட்டக்களப்பு, ஜூன் 20

மட்டக்களப்பு வாவியை பாதுகாக்கவேண்டிய பொறுப்பைக் கருத்தில்கொண்டு மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் சாரணிய மாணவர்கள் வாவிக்கரையை தூய்மைப்படுத்தி மரக்கன்றுகளை நாட்டினர்.

சாரணிய மாணவர்களின் வருடாந்த செயல்திட்டத்துக்கு அமைவாக புனித மைக்கேல் கல்லூரியின் சாரணிய மாணவர்களால் இந்த பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. அங்கு கூடிய சாரணிய மாணவர்கள் வாவிக் கரையை துய்மைப்படுத்தியதுடன், வாவிக்குள் மீன்பெருகவும், தூய்மையை கருத்தில் கொண்டும் மரக்கன்றுகளை நாட்டினர்.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தின் தனிச்சிறப்புக்கொண்ட இந்த வாவியைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மட்டக்களப்பு மக்களுக்கு உள்ளதாகவும் அனைவரையும் தங்களுடன் இணைந்து இந்த பணியை மேற்கொள்ள முன்வருவமாறும் புனித மைக்கேல் கல்லூரியின் சாரணிய மாணவர்கள் வேண்டுகோள்விடுத்தனர். (ஐ)



# கோவிட் தொற்றுநோய் பரவலால் 100 கோடி பேருக்கு மனஅழுத்தம்!

## உலக சுகாதார நிறுவனம்



ஜெனிவா, ஜூன் 20

கோவிட்-19 தொற்று நோய் பரவத் தொடங்கிய முதல் ஆண்டில் உலக மக்களிடையே மன அழுத்தமும், பதற்றமும் 25 வீதம் அதிகரித்துள்ளன என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. குறிப்பாக, பெண்கள், இளம் வயதினர், ஏற்கனவே மனநோய் உள்ளவர்கள் ஆகிய தரப்பினர் வெகுவாக பாதிக்கப்பட்டனரென அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கோவிட் தொற்று நோயால் சுகாதாரம், பொரு ளாதாரம், சமூகங்கள் ஆகிய வற்றில் நீண்ட கால பாதிப்புகள் இருக்கும். கோவிட் - 19 பல தலைமுறைகள் கண்டிராத மிக மோசமான நெருக்கடி. கோவிட் தொற்று நோயால் எண்ணற்ற மக்கள் இறந்துள்ளனர் அல்லது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். குடும் பங்களும் சமூகங்களும் பிரிந்துள்ளன. குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் கல்விச் செயல்பாடு மற்றும் நேரடித் தொடர் பாடல்களை இழந்தனர். பல தொழில்துறைகள் மூடப்பட்டன. பெருந்தொகையினர் வேலையிழந்தனர். மில்லியன் கணக்கான மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே தள்ளப்பட்டனர்.

சில குழுக்கள் மற்றவர்களை விட அதிகமாக பாதிக்கப்பட் டுள்ளனர். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மூடப்பட்டதால் இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். சமூகத்தின் அவர்களின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது கவலை, நிச்சயமற்ற தன்மை மற்றும் தனிமை போன்ற உணர்வுகளைத் தூண்டியது. இது தேவை யற்ற பழக்கவழக்கங்களுக்கு ஆளாகக் கூடிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.


சில குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரை வீட்டில் தங்க வைப்பது குடும்ப மன அழுத்தம் அல்லது துஷ்பிரயோக அபாயத்தை அதிகரித்திருக்கலாம், அவை உளநலப் பிரச்னைகளுக்கு ஆபத் தான காரணிகளாகும். பெண்களும் இதேபோல் வீடுகளில் அதிக மன அழுத்தத்தை எதிர் கொண்டுள்ளனர்.

ஒரு மதிப்பீட்டின்படி 45 வீதமான பெண்கள் தொற்று நோயின் முதல் ஆண்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏதோவொரு வகையான வன்முறையை அனுபவித்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் உலகில் கிட்டத்தட்ட 100 கோடி மக்கள் ஏதோ ஒரு மன நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறு வயதில் நடக்கும் பாலியல் கொடுமை, அதிகாரத்தைக் கொண்டு ஒருவரை கொடுமைப் படுத்துவது ஆகியவை மன நோய் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்களாக உள்ளன.

இவ் வாறான சூழலில் உலக நாடுகள் உளநல சுகாதாரத்தில் கவனம் செலுத்த வேண்டும் - என்று அந்த அறிக்கையில் உள்ளது. (ஐ)

# நிலவில் தண்ணீர் இருந்தது; புதிய ஆய்வில் கண்டறிவு!




நியூயோர்க், ஜூன் 20

நிலவில் தண்ணீர் இருந்ததற்கான ஆதாரத்தை கண்டுபிடித்துள்ளதாக சீன ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். கடந்த 2020 ஆம் ஆண்டு சீனா நிலவுக்கு அனுப்பிய சேஞ்ச் 5 என்ற ஆளில்லா விண்கலம், நிலவின் மேற்பரப்பில் இருந்த பாறைத் துகள்களை பூமிக்கு எடுத்து வந்திருந்தது.

இந்தப் பாறை துகள்களை விஞ்ஞானிகள் பரிசோதித்து வந்த நிலையில், தற்போது வெளியான ஆராய்ச்சி முடிவு அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சந்திரனில் முன்னர், தண்ணீர் இருந்தமையை உறுதிசெய்யும் விதமாகவும் அங்கேயே தண்ணீர் உருவாகியிருந்தமையையும் ஆய்வில் கண்டறிந்தனர்.

இதன் மூலம் நிலவில் தண்ணீர் எந்த வடிவத்தில் எவ்வளவு இருக்கிறது என்பது போன்ற அடுத்த கட்ட ஆராய்ச்சிகள் எளிதாக்கப்பட உள்ளன.

இதேவேளையில், நிலவில் பரந்தளவில் நீர்த்தேக்கங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் இன்னும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நிலவின் மேற்பரப்பில் இருந்து தண்ணீர் மூலக்கூறைப் பிரித்தெடுக்க தேவையான தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்தவும் இந்த கண்டுபிடிப்பு உதவவுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் இதன் மூலம் எதிர்காலத்தில் மனிதர்கள் நிலவுக்கு செல்லும் போது, அவர்களுக்கு தேவையான ஒட்சிசனை உறுதிசெய்ய இந்த ஆராய்ச்சி முடிவுகள் பெரிதும் உதவும் - என்கின்றனர். (ஐ)

# போர், வன்முறை, பேரிடர்களால் 3.6 கோடி சிறுவர்கள் இடம்பெயர்வு

## யுனிசெவ் அமைப்பு அறிக்கை



நியூயோர்க், ஜூன் 20

போர், வன்முறை, பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல், பேரிடர்களால் 2021ஆம் ஆண்டு இறுதி வரை உலகளவில் 3.6 கோடி சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 2ஆம் உலகப் போருக்குப் பின் இது மிக அதிகமான அளவு என்றும் ஐ. நாவின் சிறுவர்களுக்கான அமைப்பான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் மட்டும் இந்த எண்ணிக்கை 22 இலட்சத்தால் அதிகரித்தது. இடம்பெயர்ந்த குழந்தைகளில் ஒரு கோடியே 37 இலட்சம் பேர் அகதிகள். உள்நாட்டு போர், வன்முறைகளால் 2 கோடி 28 இலட்சம் பேர் உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்துள்ளனர்.

ரஷ்யா - உக்ரைன் போரால் இடம்பெயர்ந்தவர்கள் உட்பட 2022ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்தவர்கள் இந்த அறிக்கையில் சேர்க்கப்படவில்லை. இவர்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும்.

ஆப்கானிஸ்தான், கொங்கோ, ஏமன் ஆகிய நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டு பிரச்னை, பருவ நிலை மாற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகள் இடம்பெயர்ந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதி கரிக்கக் காரணமானது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், “இடம்பெயர்ந்த சிறுவர்கள் எண்ணிக்கை அதிகமாகிறது. அவர்களுக்கு கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் இதர சேவைகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். அகதிகளான சிறுவர்களில் அரைவாசி பேரே பாடசாலைகளில் சேர்ந்துள்ளனர். பெற்றோரைவிட்டு பிரிந்து தனியாக இருக்கும் சிறுவர்கள் கடத்தப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்படும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. உலகளவில் கடத்தப்படுபவர்களில், 28 சதவீதம் பேர் சிறுவர்களாவர். எனவே, அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்” - என்று யுனிசெவ் அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# 6 மாத குழந்தைகளுக்கு கொரோனா தடுப்பூசி!

## அமெரிக்கா அனுமதி

வாஷிங்டன், ஜூன் 20

ஆறு மாதக் குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட கொரோனா தடுப்பூசியை அவசர காலத்தில் செலுத்துவதற்கு அமெரிக்க மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

அமெரிக்காவின் பைசர் மற்றும் மொடேர்னா நிறுவனங்கள், 6 மாதக் குழந்தைகள் முதல் 5 வயது சிறுவர்கள் வரை கொரோனாவிடமிருந்து எதிர்ப்பாற்றல் பெறுவதற்கான தடுப்பூசிகளை உருவாக்கியுள்ளன.

இவற்றை அந்த வயதுப் பிரிவினருக்கு செலுத்துவதற்கு உணவு மற்றும் மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் தலைவர் ரொபேர்ட் கலிவ் கூறுகையில்,

ஏராளமான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கொரோனாவிடமிருந்து பாதுகாப்பு அளிக்கும் தடுப்பூசிக்காக நீண்ட காலம் காத்திருக்கின்றனர். அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, குறைந்தபட்சம் 6 மாதக் குழைந்தைகளுக்கு செலுத்தக் கூடிய கொரோனா தடுப்பூசிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு, கொரோனாவால் மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய அவசியம் மற்றும் மரணம் போன்ற மோசமான பாதிப்புகளைக் குறைக்கும் என்றார். (ஐ)

# கூகுள் நிறுவனத்துக்கு ரூ. 7000 கோடி அபராதம்




மெக்சிக்கோ, ஜூன் 20

அவதுாறு பதிவு வெளியிட்டமைக்காக கூகுள் நிறுவனத்துக்கு இலங்கை மதிப்பில் 7 ஆயிரம் கோடி ரூபாய் அபராதம் விதித்து மெக்சிக்கோ நீதிமன்றம் உத்தரவிட்டது.

மெக்சிக்கோவை சேர்ந்த வழக் கறிஞர், எழுத்தாளரான ரிச்டர் மொராலஸ் மீது போதைப்பொருள் கடத்தல் சட்ட விரோத பணப்பரிமாற் றத்தில் ஈடுபட்டதாக கூகுள் 2014இல் பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தி தன் பெயருக்கு களங்கம் விளைவிப்பதாகவும், அந்தப் பதிவை நீக்குமாறும் கூகுளுக்கு அவர் கோரிக்கை விடுத்தார். பதிவு நீக்கப்படாததால் 2015இல் அவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், “கூகுள் நிறுவனம் 7 ஆயிரம் கோடி ரூபாய் ரிச்டர் மொராலஸூக்கு செலுத்த வேண்டும்“ என தீர்ப்பளித்தது. இதற்கு பதிலளித்த கூகுள் நிறுவனம், “இது கருத்து சுதந்திரம், அடிப்படை உரிமைகளை குறித்து மதிப்பிடும் இந் தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வோம்” எனவும் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஆஸிக்கு எதிரான ஒருநாள் தொடர்:

# பதும் நிஸங்க அதிரடி சதம் இலங்கை அபார வெற்றி!




கொழும்பு, ஜூன் 20

பதும் நிஸங்கவின் அதிரடி கன்னிச் சதம் கைகொடுக் அவுஸ்திரேலிய அணியை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

இந்த வெற்றியின் மூலம், 5 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி 2 - 1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

நேற்று பகல் - இரவு போட்டியாக கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

50 ஓவர்களில் அந்த அணி, 6 விக்கெட்கள் இழப்புக்கு 291 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கை அணிக்கு நிரோசன் டிக்வெல்ல, பதும் நிஸங்க தொடக்கம் கொடுத்தனர். இருவரும் ஓரளவுக்கு சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினர். டிக்வெல்ல, 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து, பதும் நிஸங்கவுடன் இணைந்த குசல் மெண்டிஸ் அபாரமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். இருவரும் இலங்கை அணிக்காக நீண்ட காலத்தின் பின்னர் சிறப்பான இணைப்பாட்டம் ஒன்றை ஏற்படுத்தினர். இருவரும் அரைச்சதம் கடந்தனர்.

தொடர்ச்சியாக இருவரும் சிறப்பாக ஆடிய நிலையில் குசல் மெண்டிஸ் காயம் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார். அவர் 85 பந்துகளில் 8 பௌண்ட்ரிகளுடன் 87 ஓட்டங்களை எடுத்திருந்தார்.

இதைத் தொடர்ந்து 123 போட்டிகளில் பதும் நிஸங்க சதம் அடித்தார்.

இதனிடையே, தனஞ்சய டீ சில்வா 25 ஓட்டங்கள், தசூன் சானக ஓட்டம் எதையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

இறுதி விக்கெட்டாக பதும் நிஸங்க 147 பந்துகளில் 137 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார். அவர் 11 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழந்தார்.

48.3 ஓவர்களில் நான்கு விக்கெட்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

சரித் அசலங்க 13 ஓட்டங்களையும் சாமிக கருணாரத்ன ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் றிச்சர்ட்சன் 2 விக்கெட்களையும், ஹசல்வூட், மக்ஸ்வெல் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் கொடுத்த வோர்ணர் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அரோன் பின்ஞ் 62 ஓட்டங்களையும், லபுசாக்னே 29, அலெக்ஸ் காரி 49, மக்ஸ்வெல் 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

ட்ராவிஸ் ஹெட் ஆட்டமிழக்காமல் 3 பௌண்ட்ரிகள் 3 சிக்ஸ்ர்களுடன் 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்திருந்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் வொண்டர்ஸே 3 விக்கெட்களையும், சாமீர, வெல்லாலகே, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (ஐ)

# மழையால் கைவிடப்பட்டது இந்தியா - தெ.ஆபிரிக்கா போட்டி!

பெங்களூர், ஜூன் 20

இந்தியா மற்றும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஐந்தாவது இருபது - 20 போட்டி மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது. அதனால், இரு அணிகளும் இருபது - 20 தொடருக்கான கிண்ணததைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரில் விளையாடியது.

இந்த தொடரின் ஐந்தாவது போட்டி பெங்களூரில் உள்ள எம். சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்த போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் கேஷவ் மகராஜ், பந்துவீச்சைத் தெரிவு செய்தார். அதனால், இந்திய அணி முதலில் பட் செய்தது. ருதுராஜ் மற்றும் இஷான் கிஷன் இனிங்ஸை தொடங்கினர்.

மழை காரணமாக இந்த போட்டிக்கு இடையூறு இருக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஆட்டம் தொடங்கியது. இந்திய அணி 3.3 ஓவர்கள் துடுப்பாட்டம் செய்து 2 விக்கெட்கள் இழப்புக்கு 28 ஓட்டங்கள் எடுத்தது. இஷான் கிஷன் மற்றும் ருதுராஜ் கெய்க்வாட் தங்கள் விக்கெட்டை இழந்திருந்தனர்.

இந்நிலையில், மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது. அப்போது ஷ்ரேயாஸ் ஐயர் மற்றும் ரிஷப் பந்த் களத்தில் பேட் செய்து கொண்டிருந்தனர்.

மழை தொடர்ந்த காரணத்தினால் போட்டியை மேற்கொண்டு நடத்துவதற்கான சாத்தியம் இல்லை என சொல்லி போட்டியை கைவிடுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இதனால், 2 - 2 என்ற கணக்கில் தொடர் சமநிலையில் இருந்ததால் கிண்ணம் இரு அணிகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது. (ஐ)



# சட்டவிரோதமாக ஆஸி. சென்ற 41 பேர் நாடு கடத்தப்பட்டனர்!

கொழும்பு, ஜூன் 20

சட்டவிரோதமாக படகில் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற 41 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் கரையோர பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட இவர்கள், கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் அவுஸ்திரேலியாவின் விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாடு கடத்தப்பட்ட 41 பேரும் முல்லைத்தீவு, சிலாபம், நீர்கொழும்பு, தொடுவாவ மற்றும் மாரவில ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் 6 பேர் 16 வயதுக்கு குறைந்தவர்கள் என்றும் தெரிய வருகின்றது.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள், இலங்கைக்கான அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் அலுவலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், குடிவரவு-குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு, நீர்கொழும்பு மேலதிக நீதிவான் மாலன் ஜயசூரிய முன்பாக முற்படுத்தப்பட்டனர். 37 பேரை சரீரப் பிணையில் விடுதலை செய்யவும் குறித்த கடல் பயணத்தை நேரடியாக ஏற்பாடு செய்த குற்றச்சாட்டில் நால்வரை தடுத்து வைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவர்களுள் 30 பேருக்கு இலங்கைக்கான அவுஸ்திரேலியா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் தலையீட்டில், தற்காலிக சுற்றுலா விமான பயணச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதுடன், 11 பேருக்கு அவுஸ்திரேலியா அரசாங்கத்தால் விமான பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. (ஐ)

# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலர்கள்!

கொழும்பு, ஜூன் 20

இரண்டு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, சிறுவர் விவகாரம் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக எச். கே. டபிள்யூ. எம். என். பி. ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழில்நுட்ப மற்றும் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சுக்கான செயலாளராக ஜயந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மக்களின் கோபமும் நம்பிக்கையீனமும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 20

**நாட்டில் நிலவும் மோசமான சூழ்நிலை மக்களை விரக்திக்கு தள்ளியுள்ளது. அவர்கள் கோபமடைந்துள்ளனர். நம்பிக்கை இழந்து வருகின்றனர். மக்கள் நம்பிக்கையீனமடைவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எச்சரித்துள்ளது.**

இலங்கையர்கள் பெரும்பாலானோர் வழக்கமான வருமானத்தை இழந்து, தங்கள் குடும்பத்துக்கு உணவளிக்க வழியின்றி உள்ளனர். வரிசையில் நிற்கும் போதும், மருந்துகள் கிடைக்காத காரணத்தாலும் பலர் உயிரிழக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகின்றன. நாட்டில் நிலவும் மோசமான சூழ்நிலை மக்களை விரக்திக்கு தள்ளியுள்ளது. இதனால், அவர்கள் கோபமடைகின்றனர் என்று அந்த சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதை நெருக்கடி நிலை குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் அதன் செயலாளர் இசுறு பாலபடபெந்தி ஆகியோர் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மேலும், நம் நாட்டில் ஆயிரக்கணக்கான மக்கள் பெற்றோல் மற்றும் டீசலுக்காக பல கிலோமீற்றர்கள் நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் சில நேரங்களில் நாள் கணக்கிலும் காத்திருக்கின்றனர். இது தவிர, எரிவாயு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. எந்தத் தீர்வும் இல்லாமல் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

பலர் தங்கள் வழக்கமான வருமானத்தை இழந்து, தங்கள் குடும்பத்துக்கு உணவளிக்க வழியின்றி உள்ளனர். வரிசையில் நிற்கும் போதும், மருந்துகள் கிடைக்காத காரணத்தாலும் பலர் உயிரிழக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகி யுள்ளன. நாட்டில் நிலவும் மோசமான சூழ்நிலை மக்களை விரக்திக்கு தள்ளியுள்ளது. இதனால் அவர்கள் கோபமடைகின்றனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர். குருநாகல் மாஸ்பொத்த பகுதியில் உள்ள பெற்றோல் நிரப்பு நிலையத்தில் துப்பாக்கி ஏந்திய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொது மக்களை தாக்கும் காட்சிகளும், அத்துருகிரியவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஏற்பட்ட வார்த்தைப் பரிமாற்றங்களும் வன்முறைக் காட்சிகளும் நாடு முழுவதிலும் நிலவும் கொந்தளிப்பான சூழலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பொலிஸார் மற்றும் ஆயுதப் படையினரும் தற்போது கடினமான சூழலில் உள்ளதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஏனென்றால், அவர்களும் அவர்கள் குடும்பத்தினரும் மற்ற பொது மக்களைப் போலவே அதே அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். இருந்தபோதிலும், சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் பொதுமக்களுடன் பழகுவதில் நிதானத்துடனும் எச்சரிக்கையுடனும் செயல்படுவது மிகவும் முக்கியமானது. பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செய்யும்போது புரிந்துணர்வுடனும், இரக்கத்துடனும் செயல்படுவதும், பொது மக்களின் துயரங்களை உணர்ந்து செயல்படுவதும் அவசியம். சட்ட அமுலாக்க அதிகாரிகள் எல்லா நேரங்களிலும் நேர்மையாகவும் பாரபட்சமின்றியும் செயல்பட வேண்டும். பாரபட்சமான மற்றும் நியாயமற்ற செயல்களாகக் காணப்படும் எந்த செயல்களும் ஏற்கனவே இருக்கும் அவநம்பிக்கையை அதிகரிக்கும்.

பொதுமக்களின் சுமையைக் குறைக்கவும், பொதுமக்களின் தேவைகள் நியாயமான முறையில் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யவும் அவசர மற்றும் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நிலைமையின் தீவிரத்தைக் கூறி பொதுமக்களை மேலும் அச்சுறுத்துதை விடுத்து, அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை பொதுமக்களுக்கு அரசாங்கம் அறிவிப்பது மிகவும் முக்கியமானது. அத்துடன் இந்த பிரச்னைகள் மற்றும் எரிபொருள் மற்றும் எரிவாயு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான அரசின் திட்டங்கள் மற்றும் அத்தகைய திட்டங்களின் முன்னேற்றம் ஆகியவவை குறித்து விளக்கமளிக்க வேண்டும்.

பொதுமக்களின் நம்பிக்கையை உருவாக்குவது இந்த நெருக்கடிகளைத் தீர்ப்பதில் முக்கியமான படியாகும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மீண்டும் வலியுறுத்துகிறது. அரசாங்கம் மற்றும் சட்ட அமுலாக்க பிரிவினர் மீது பொது மக்கள் நம்பிக்கையீனம் அடைவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் - என்றுள்ளது. (ஐ)

வீட்டுத் தோட்டம் செய்வோம்

வளம் கொழிக்கும் பூமி என
வரலாற்றின் அத்தனை பக்கங்களிலும்
பெயர் பொறித்த நம் தாய்நாடு.
இன்று அடிப்படைத் தேவைகளுக்காகவும்
உணவுக்காகவும் கை ஏந்த ஆரம்பித்திருக்கிறது.
மூன்று வேளை உணவு இருவேளையாகவும்
ஒரு நேரமாகவும் சுருங்கியிருக்கிறது.
பஞ்சமும் பட்டினியும் கண்முன்னே
நிழலாடுகின்றன...!



போதும்...! ஏந்திய கைகள்
சற்றே உயரட்டும்

நாம் வாழப்போதுமான வளத்தை தன்னுள் வைத்திருக்கிறது நமது தாய்மண்!
வீட்டுக்கொரு தோட்டம் செய்வோம்
நமது பசியை நாமே போக்க...
எமது கைகளை சற்றே உயர்த்துவோம்!
பெரிதோ சிறிதோ... அவரவர் வீட்டுத் தேவைக்கு
போதுமான காய்கறிகளை நம் வீட்டிலேயே உற்பத்தி செய்வோம்...!
திட்டமிடலும் உழைப்புமே
நம்மையும் நம் நாட்டையும் காக்கும்!

www.dantv.tv

## சகல...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை, ஐந்தாம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சைகளை ஒக்ரோபர் அல்லது நவம்பரில் நடத்துவதற்கும், டிசெம்பரில் இடம்பெற வேண்டிய கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையை 2023 பெப்ரவரியில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஏற்கனவே திட்டமிட்டபடி பாடசாலை கற்றல் செயல்பாடுகளை தொடர்ந்தும் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

200இற்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளில் போக்குவரத்து சிக்கல் மிகக் குறைவாகும். எனவே அவ்வாறான பாடசாலைகளை நடத்திச் செல்வதில் சிக்கல் ஏற்படாது. எனினும், நகர்புற பாடசாலைகளில் அவ்வாறான நிலைமை இல்லை. எனவே, அவற்றில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக இணையவழி கற்பித்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு இணையவழி கற்பித்தலை முன்னெடுப்பதைக் கருத்தில் கொண்டு இவ்வாரம் காலை 8 மணி முதல் பகல் 1 மணி வரை மின் துண்டிப்பை நடைமுறைப்படுத்தாதிருக்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு, பாடசாலைகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் குறித்த மீளாய்வு மீண்டும் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது குறித்த வாரத்தில் கல்வி செயல்பாடுகள் இடம்பெற்ற முறைமை தொடர்பில் அறிக்கைகள் பெறப்பட்டு அவை மதிப்பீடு செய்யப்பட்டு அடுத்த வாரம் குறித்து தீர்மானிக்கப்படும்.

அத்துடன், கல்விக்காக கோவிட் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்வி தொலைக்காட்சி சேவைகளை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓகஸ்ட் மற்றும் டிசெம்பரில் வழங்கப்படும் தவணை விடுமுறையை மட்டுப்படுத்தி பாடசாலைகளை நடத்தி பாடப்பரப்புக்களை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

கோவிட் காலத்திலிருந்து தரம் 1 முதல் 5 வரையான ஆரம்ப பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள் தொடர்பில் விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பாடநூல்கள் உள்ளிட்ட கல்வித்துறை சார் அச்சுக்கு தேவையான காகிதங்கள் அல்லது கடதாசிகள் இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்படவுள்ளன. அடுத்த வருடத்துக்கான சீருடையில் ஒரு தொகுதியை வழங்குவதற்கு சீனா இணக்கம் தெரிவித்துள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து கல்வி செயல்பாடுகளை வழமை போன்று முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

மேலும், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் அவற்றுக்கு பொறுப்பான உயர் அதிகாரிகள் தீர்மானிக்க முடியும். இந்தவாரம் பாடசாலைகள் மூடப்படும் வாரமாகவே கருதப்படும். எனவே, ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை எனில் அது அவர்களது விடுமுறையாகக் கருதப்பட மாட்டாது - என்றார். (ஐ)

## யாழ். வலயப்...

னர் அவர்களின் ஏகோபித்த முடிவாக கல்விச் செயல்பாட்டில் தளர்வில்லாமல் பாடசாலைகளை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவையான வகுப்புக்களை நேரடியாகவும் ஏனய மாணவர்கள் ணழழஅ, வநநஅ செயலி மூலமாகவும் கல்வி வழங்கவும் அதனை தீர்மானிக்கும் பொறுப்பையும் அதிபர்கள் ஏற்றுள்ளனர். இதேபோன்று ஏனய பாடசாலைகளும் மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் செயல்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பாடசாலைகள் மூடப்படாது கல்வி வழங்கப்படவேண்டும், பிரதான பரீட்சைகளை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு நேரடியாக வகுப்புக்கள் நடத்தப்படல் வேண்டும், ணழழஅ மூலமான கற்றல் செயற்பாட்டில் ஏனைய மாணவர்களுக்கான இணைக்கப்படவேண்டும், ஆசிரியர் வருகை நேரம் தொடர்பிலும் தரித்திருந்து கற்பிக்கும் காலம் தொடர்பிலும் தளர்வுப்போக்கை கடைப்பிடிக்கலாம், இது ஒரு சமூகப்பொறுப்பு என்பதை உணர்ந்து செயல்படல் வேண்டும்.

கிராமப்புற பாடசாலைகளின் அருகில் இருந்து நகர்புறப் பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் தற்காலிகமாக அருகேயுள்ள பாடசாலைகளில் சென்று கற்றலில் ஈடுபட அனுமதிக்க முடியும். இதனை அதிபர்கள் செயல்படுத்தலாம், போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மாற்றாக மாணவர்களை சைக்கிள்களிலும் நடந்தும் பாடசாலைக்கு செல்ல ஊக்குவிக்க முடியும், எவ்வாறெனினும் ஒவ்வொரு பாடசாலை அதிபர்களும் உங்கள் பாடசாலைகளை நடத்தும் பொறுப்பை ஏற்று செயல்படுத்துமாறு பணிக்கப்படுகின்றீர்கள்.

மாகாண கல்விப்பணிப்பாளரால் இது தொடர்பாக விபரிக்கப்பட்ட இணைக்கப்பட்டுள்ள விடயங்களையும் கவனத்தில் எடுத்து செயல்படுமாறு கேட்டுக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ஐ)

## மின்வெட்டு...

யும் நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படும்.

ஏ, பி. சி, டி, ஈ., எவ், ஜி, எச், ஐ., ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரியு, யூ, வி, டபிள்யூ ஆகிய வலயங்களில் நண்பகல் 12 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரை சுழற்சி முறையில் மின்சாரம் துண்டிக்கப்படும்.

கொழும்பு முன்னுரிமை வலையங்களில் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரையான காலப்பகுதிக்குள் இரண்டரை மணி நேரம் மின்வெட்டு அமுலாகும். (ஐ)

## எங்கள்...

பட்டுள்ளது. பாடசாலைகளை சீராக இயக்குவதற்கான எந்தப் பொறிமுறையும் அரசிடம் கிடையாது. எம்மால் முன்வைக்கப்பட்ட பொறிமுறைகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தாமல் தான்றோன்றித்தனமாக விவசாயிகளுக்கு வழங்கிய முடிவைப் போன்று கல்வியிலும் முடிவுகளை எடுக்கின்றது. இதில், ஒருசில மாவட்டங்களில் பாடசாலைகளை மூடுதல், கிராமப்புற பாடசாலைகளைக் கைவிடுதல், முழு மாணவர்களுக்கும் பயனளிக்காத இணையவழி கற்றலை அமுல்படுத்துதல் போன்ற தவறான முடிவுகளே எடுக்கப்படுகின்றன.

ஆனால், அரசாங்கம் எந்த முடிவை எடுத்தாலும் நெருக்கடியான காலங்களில் அதிபர்களே சமயோசிதமான முடிவுகளை எடுத்தார்கள் என்பதனை மறுக்க முடியாது. இதேபோன்று இன்னும் நெருக்கடியான இந்த சூழ்நிலையில் அதிபர்கள் மிக்க நிதானத்துடன் பாடசாலையின் அனைத்து மனித மனங்களையும் இணைத்து முரண்பாடுகள் இல்லாமல் எம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளின் அறிவு வளம்பெற அடுத்த படிநிலையை உருவாக்குவோம் என உருக்கமாக உங்களை வேண்டிக் கொள்கின்றோம்.

விசேடமாக ஆசிரியர்களின் பொருளாதார நிலை, போக்குவரத்து, அவர்களின் குடும்பநிலை என்பவற்றை கருத்தில் கொண்டு உச்ச நெகிழ்ச்சிப் போக்கோடு அனைத்தையும் கையாளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

# வழிப்பறியில் ஈடுட்ட இருவர் வசமாக மக்களிடம் சிக்கினர்!

வடமராட்சி, ஜூன் 20

வடமராட்சி வல்லைப் பகுதியில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் பொது மக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்ற நண்பகல் வேளை இடம்பெற்றுள்ளது. இறைச்சி வியாபாரி ஒருவரிடம் இருந்து 3 இலட்சம் ரூபாயை பறிக்க முயன்றபோதே இந்த வழிப்பறி கொள்ளையர்கள் சிக்கினர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

புத்தூரில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரி ஒருவர் வல்லைப் பகுதியூடாக வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தார். இதன் போது மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் கத்தி முனையில் அவரை அச்சுறுத்தி அவரிடமிருந்த 3 இலட்சம் ரூபாயை கொள்ளையடித்துக் கொண்டு தப்பினர்.

தப்பமுயன்ற கொள்ளையரில் ஒருவரை துரத்திப் பிடித்த வியாபாரிக்கு அந்த வீதியால் பயணித்தவர்களும் உதவினர். இதையடுத்து, தப்பிச் சென்ற இளைஞரை நாவல்காடு பகுதியில் வைத்து இளைஞர்கள் பிடித்தனர். இருவரையும் நையப்புடைத்த இளைஞர்கள், பணத்தை மீட்டதுடன், வழிப்பறியில் ஈடுபட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவ்வாறு வழிப்பறியில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாணம் புறநகர் பகுதியை சேர்ந்தவர்கள் என்று அறிய வந்துள்ளது. (ஐ-2-3)

## யாழ். -...

கிலோ பயணப் பொதிகளையும் மேலதிகமாக 5 கிலோ எடை பயணப் பொதியை கைவசம் கொண்டுசெல்லவும் முடியும். இன்று திங்கட்கிழமை முதல் பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விரைவில்...

பொதுஜன பெரமுன கட்சியின் ஆளும் தரப்பின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதியை சந்தித்தனர்.

இதன்போது, பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம், “சிறீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் என்பதற்காகவே 69 இலட்சம் மக்கள் 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். ஆகவே, சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பிரதமர் தலைமையிலான புதிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும்”, என்று வலியுறுத்தினர்.

அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கண்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற வேண்டும் என்பதற்காகவே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கினோம். பொருளாதார பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அரசாங்கம் அதிக அவதானம் செலுத்தி வருகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரத்தை பிரதமருக்கு வழங்குவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைந்தாலும், தற்போதைய நிலைமையில் அது முற்றிலும் மக்கள் ஆணைக்கு முரணானது. ஏனெனில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் அல்ல. 2020ஆம் ஆண்டு அவரை மக்கள் ஜனநாயக ரீதியில் புறக்கணித்துள்ளார்கள். ஆகவே, அவர் தலைமையிலான அரசாங்கத்தை நாட்டு மக்கள் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப் போவதில்லை- என்றும் கூறினர்.

இதற்குப் பதிலளித்த, “நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. பொருளாதாரப் பிரச்னைக்கு வெகுவிரைவில் நிலையான தீர்வு எட்டப்படும். அரசியல் ரீதியிலான பிரச்னைக்கு தீர்வு காண நாட்டு மக்களுக்கு வெகுவிரைவில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

“பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகல அரசியல் கட்சிகளும் பாராம்பரியமான அரசியல் கொள்கையில் இருந்து வெளியேறி பொதுக் கொள்கைக்கமைய செயல்பட வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்துகிறேன். தற்போதைய நிலையில் ஆளும் மற்றும் எதிர்தரப்பினரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும் - என்றும் அவர் இதன் போது கூறினார். (ஐ)

## கீரிமலையில்...

இந்த மர்ம மரணம் கொலையாக இருக்கலாம் என்ற ரீதியில் காங்கேசன் துறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## தந்தைக்கு...

அனைவர் மத்தியிலும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

1996ஆம் ஆண்டு மத்திய வங்கி குண்டு வெடிப்பு சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பார்த்தீபனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இந்த வழக்குக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கு இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், திருநெல்வேலியில் வசித்து வந்த அவரின் தாயாரான விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரி (கண்ணாடி அம்மா) கடந்த புதன்கிழமை காலமானார். அவரின் இறுதிக் கிரியையில் பங்கேற்பதற்கு அவருக்கு ஒரு மணி நேரம் அளிக்கப்பட்டது. இதற்கமைய அவர், இறுதிச் சடங்கில் நேற்று பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அத்தியாவசிய...

காரணத்தால் வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகள்கூட தாமதமடைகின்றன.

இது தொடர்பில் சுகா தார அமைச்சின் அதிகாரி களும், அரச வைத்திய அதிகாரிகள் சங்கமும் இணைந்து கவலை தெரிவித்துள்ளன. எனவே, ஒவ்வொரு வாரமும் வெள்ளிக் கிழமைகளில் அவசர சுகாதார சேவைகளுக்கு ஒதுக்கப்படும் வகையில், மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை பரிந்துரைக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகளில் அத்தியாவசிய சேவைகள் தடையின்றி தொடரும் வகையில் மீதமுள்ள சுகாதார ஊழியர்களுக்கும் பொது போக்குவரத்து மூலம் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## பெற்றோலுக்காக...

போன்ற எரிபொருளை நம்பி வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துபவர்கள் உட்பட அத்தி யாவசிய சேவைகளில் ஈடுபடும் மருத்து வர்கள் மற்றும் ஏனைய அத்தியாவசிய ஊழியர்களுக்கு முன்னுரிமை அடிப் படையில் எரிபொருள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டில் போதியளவு டீசல் கையிருப்பு இருப்பதனால் தற்போது அதற்கு அதிக தேவை ஏற்படாது என்றபோதிலும் டீசலை சிக்கனமாக பயன்படுத்துமாறும் அமைச்சர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பேருந்துகள், பாடசாலை போக்குவரத்து வாகனங்கள் மற்றும் சுற்றுலா வாகனங்களுக்கு தேவையான எரிபொருளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வாகனங்கள் எரிபொருளை பெற்றுக்கொள்ள அருகில் உள்ள இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களுக்கு செல்லுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# இன்று தொடக்கம் 50 வீதமான பேருந்துகள் சேவையில் ஈடுபடும்!

## கெமுனு விஜயவர்த்தன அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 20

டீசலை தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு இலங்கை போக்குவரத்து சபை இணக்கம் தெரிவித்துள்ளதால் நாளை முதல் அனைத்து பஸ்களிலும் 50 வீதமான சேவைகள் இடம்பெறும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக இன்று திங்கட் கிழமை முதல் நாடளாவிய ரீதியில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன என்று அவர் கூறினார்.

இலங்கை போக்குவரத்துச் சபை ஊடாக நாளொன்றுக்கு 8 இலட்சம் டீசலை தனியார் பஸ்களுக்கு விநியோகிப்பதற்கு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர இணக்கம் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இந்தத் தீர்மானத்துக்கு வந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வாரம் 70சதவீதத்துக்கும் அதிகமான தனியார்



பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பிரச்னை காரணமாக கார் மற்றும் மோட்டார் சைக்கிளிலில் பயணிக்க முடியாத தரப்பினர் பொதுப்போக்குவரத்து சேவையை பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஐ)

# பதுக்கிய பொருட்கள் ஓட்டமாவடியில் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 20

ஓட்டமாவடி, வாழைச்சேனையில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது, பதுக்கப்பட்ட பொருட்கள் பல கைப்பற்றப்பட்டன என்று பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஆர். எவ். அன்வர் சதாத் தெரிவித்தார்.

இதன்போது, கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை செய்த நிலையங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட் டது. இதேபோன்று முறைகேடாக விற் பனை செய்ய வைக்கப்பட்டபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அத்துடன், பதுக்கி வைக்கப்பட்ட பொருட்களும் இதன்போது பெருமள வில் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக் கப்பட்டது. (ஐ)

# மக்களுக்காக போராடுபவர்களை வேட்டையாடும் செயல்பாட்டை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது

## ஜே. வி. பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 20

புதிய பிரதமரும் ஜனாதிபதியும் இணைந்து மக்களுக்காக போராடும் அமைப்புகளின் தலைவர்களை வேட்டையாடும் செயல்பாடுகளை முன்னெடுத்து வருவகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும், கடந்த சில மாதங்களாக நீடித்து வரும் பொருளாதார நெருக்கடியால் நாட்டு மக்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

மாதக் கணக்கில் மக்கள் தங்களது வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொளவ்தற்காக எரிபொருள் வரிசையில் காத்திருக்கின்றனர். எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்காக எரிவாயு வரிசையில் நின்று நாட்களை வீணடிக்கின்றனர்.

பயணத்தை மேற்கொள்வதற்கு பஸ் களின்றி பயணிகள் வீதியில் நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்னைகள் தீவிரமடைந்துள்ளதால் மக்கள் வரிசையில் நின்றவாரே மரணிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

மருந்துகள் இல்லாததன் காரணமாக வைத்தியசாலைகளில் நோயாளர்கள் உயிரிழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே, முழு நாடும் பேரழிவை எதிர் கொண்டுள்ளது. நாட்டு மக்கள் சவால் களை எதிர்கொண்டு இருக்கும்போது நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக, நாட்டு மக்கள் தங்களது பிரச்னைகளை கூறும்போது அவர்களின் குரல்களை ஒடுக்கும் செயல்பாட்டில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

தமது உரிமைகளை கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தரப்பினரை, இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு செல்லுமாறு கூறும் தரப்பினரை வேட்டையாடும் செயற்பாட்டை இந்த அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியதையே இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். ஆனால், அரசாங்கம் தற்போது என்ன செய்து கொண்டு இருக்கின்றது.

பிரச்னைக்கு தீர்வு கோரி போராடிக் கொண்டிருக்கும் மக்களை, மக்களுக்காக போடும் சமூக நல அமைப்புகளின் தலை வர்களை கைதுசெய்யும் நடவடிக்கையில் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. (ஐ)

# வாசிப்பு அனுபவ பகிர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 20

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை தமிழ் எழுத்தாளர்களின் நூல்களுக்கு பரிசளிக்கும் திட்டத்தை கடந்த 2021ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட போட்டியில் 2019 - 2020 ஆம் ஆண்டுகளில் வெளியாகி தலா 50,000 ரூபாய் பரிசுபெற்ற நான்கு நூல்கள் பற்றிய வாசிப்பு அனுபவப்பகிர்வு நிகழ்ச்சி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு (இலங்கை நேரம்) மெய்நிகரில் நடைபெறவுள்ளது.

எழுத்தாளர் காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் எழுதிய மைவண்ணன் இராம காவியம் (கவிதை) நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை அவுஸ்திரேலியா மெல்பர்னில் வதியும் வாசகி திருமதி விஜி இராமச்சந்திரனும், எழுத்தாளர் கே. ஆர் .டேவிட் எழுதிய கே. ஆர். டேவிட் சிறுகதைகள் நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை அவுஸ்திரேலியா பிறிஸ்பேர்னில் வதியும் எழுத்தாளர் திருமதி தாமரைச்செல்வியும், எழுத்தாளர் சீமான் பத்திநாதன் பர்ணாந்து எழுதிய குஞ்சரம் ஊர்ந்தோர் ( நாவல் ) பற்றிய வாசிப்பு அனுபவத்தை கிளிநொச்சியில் வதியும் எழுத்தாளர் கருணாகரனும், எழுத்தாளர் எம். வாமதேவன் எழுதிய குன்றிலிருந்து கோட்டைக்கு ( கட்டுரை) நூல் பற்றிய வாசிப்பு அனுபவத்தை கொழும்பிலிருந்து எழுத்தாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மல்லியப்பு திலகரும் சமர்ப்பித்து உரையாற்றுவர்.

இந்த நிகழ்வில், சூம் செயலி மூலம், 884 3580 5663 என்ற அடையாள எண்ணில் 353292 என்ற கடவுச் சொல்லைப் பயன்படுத்தி இணைந்து கொள்ளமுடியும். (ஐ)

# பெற்றோலுக்கு பதிலாக டீசல் வந்ததால் குழப்பம்!

வாழைச்சேனை, ஜூன் 20

நாட்டில் எரிபொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகிறது. மட்டக்களப்பு மாவட்டமும் இதனால் கடும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றது. இந்நிலையில், நீண்டவரிசைகளில் நின்று மக்கள் எரிபொருளை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று ஓட்டமாவடி, வாழைச் சேனை எரிபொருள் நிலையங்களில் பெற்றோலைப் பெறுவதற்காக சில கிலோமீற்றர் நீளத்துக்கு வரிசையில் மக்கள் காத்திருந்தனர். ஆனால், பெற்றோலுக்கு பதிலாக அங்கு டீசலே வந்ததால் அந்தப் பகுதி யில் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

எனினும், இதில் தலையிட்ட பொலிஸார் வரிசையில் காத்திருந்தவர்களை சமரசம் செய்து, அவர்களுக்கு டோக்கன் வழங்கி பெற்றோல் வரும்போது அந்த ஒழுங்கின்படி வழங்குவதாக உறுதியளித் தனர்.

இதைத் தொடர்ந்து ஓட்டமாவடி, வாழைச்சேனை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் மட்டும் வழங்கப்பட்டது. சுமார் 4 கி. மீ. வரிசையில் நின்று வாகனங்கள் எரிபொருளை பெற் றுச் சென்றன. (ஐ)

# டெங்கு நோய் தாக்கம் மீண்டும் நாட்டில் உச்சம்!

கொழும்பு, ஜூன் 20

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் எனவே இலங்கை பொலிஸின் சுற்றுச் சூழல் பிரிவு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன் போது தொடர்ந்துரைத்த அவர்,

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட சீரற்ற வானிலையை அடுத்து நாட்டின் பல பாகங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது. இது தொடர்பில், பொலிஸின் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவு விசேட அவதானத்தை செலுத்தியுள்ளது.

சுகாதார பிரிவினரின் ஒத்துழைப்புடன் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பிரிவு முன்னெடுத்து வருகின்றது. விசேட சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுவதுடன் டெங்கு நுளம்பு பெருகும் வகையிலான இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 1615 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசேடமாக 2021ஆம் ஆண்டு 35,965 நிறுவனங்கள் டெங்கு சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதேபோன்று இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 36,959 வீடுகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், 316, 858 வளாகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த வருடம் 13,228 வளாகங்கள் டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் வகையில் காணப்பட்டமை கண்டறியப்பட்டது. அதேபோன்று இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 20,741 வளாகங்கள் டெங்கு நுளம்புகள் இனப்பெருக்கும் செய்யுடம் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

டெங்கு நோய் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியமாகும் - என்றார். (கே)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் யாழ் பாவாணன்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சாணிக்காயிதம், இடியட்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா - மகப்பேற்று வைத்திய நிபுணர் சிறீதரன்



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

---

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்ட்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு